இதழ் I. நெ. 3.
ரிஜிஸ்தர் நெ. M. 2623. 25.

# 'கிராமப் பஞ்சாயத்து.'

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

டிசம்பர் 1930.

பிரசுரஞ் செய்வோர்.

சென்னை மாகாணக் கூட்டுறவு யூனியன்,

ராயப்பேட்டை, சென்னை.

## அடக்கம்.


| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | பக்கம். |
| 1. | கிராம நாட்டாண்மை | ... | ... | ... | 45 |
| 2. | நமது நிலக்கடலைப் பயிர் | ... | ... | ... | 50 |
| 3. | பத்திராதிபர் குறிப்புகள் | ... | ... | ... | 55 |
| 4. | காட்டுப் பஞ்சாயத்து | ... | ... | ... | 60 |
| 5. | டாடிபள்ளிகூடம் தாலூக்கா கான்பரென்ஸ் | | ... | ... | 62 |
| 6. | இந்தியாவும் ருஷியாவும் | ... | ... | ... | 63 |
| 7. | ஸர்க்குலர்கள் ... | ... | ... | ... | 64 |
| 8. | சப்பிலிமெண்டு ... | ... | ... | ... | |


## சந்தா விவரம்.

| | | | |
|---|---|---|---|
| பஞ்சாயத்துக்களுக்கு வருஷத்துக்கு ரூபாய் | | | 2. |
| மற்றவர்களுக்கு | ... | ,, | 3. |
| தனிப்பிரதி | ... | அணா | 4. |

## விளம்பர விகிதம்.

சஞ்சிகை மானேஜருக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

## சந்தாதார்களுக்கு விண்ணப்பம்.

நமது சந்தாதார்கள் ஒவ்வொருவருக்கும் இப்பொழுது அனுப்புகிற இந்தச் சஞ்சிகையோடு மூன்று சஞ்சிகைகளையும் அனுப்பியிருக்கிறோம் சஞ்சிகைக்காக எம்மிடத்தில் பெயர் கொடுத்தவர்களுடைய ஜாபிதாவில் அநேகர் மணியார்டர் மூலமாகத் தமது சந்தாத் தொகையை எமக்கு அனுப்பிவிட்டார்கள் எனினும் இன்னும் பெரும்பாலோர் தமது சந்தாப் பணத்தை அனுப்பவில்லை யென்று அறிவித்துக் கொள்ளுகிறோம். ஜனவரிமாதம் முதல்தேதியிலிருந்து சந்தாப் பணத்தைச் செலுத்தாதவர்களுக்கு வி. பி. மூலமாகச் சஞ்சிகையை அனுப்பிச் சந்தாவைப் பிரிக்க உத்தேசித்திருக்கிறோம். இந்த ஆபீஸில் வேலையை அதிகப்படுத்தாமலும், எங்களுக்குச் சிறிது நஷ்டமேற்படாமலும் இருக்கும் பொருட்டுப் பரஸ்பர நன்மையை உத்தேசித்து டிசம்பர் மாதம் 31-தேதிக்குள்ளாகச் சந்தாப்பணத்தை மணியார்டர் மூலமாகக் கட்டிவிடுமாறு சந்தாதார்களை வேண்டிக் கொள்கிறோம். முன்னதாகவே எங்களுக்குச் சந்தாப் பணத்தைச் செலுத்தி உதவிசெய்த நேசர்களுக்கு எங்கள் மனப்பூர்வமான நன்றி செலுத்துவதோடு, மற்றவர்களும் கூடிய சீக்கிரம் சந்தாவை மணியார்டர் மூலமாக அனுப்பி எங்களுக்கு உதவி செய்வார்கள் எனனும் நோக்கத்தோடு அவர்களுக்கும் நன்றி செலுத்துகிறோம்.

V வெங்கடசுப்பையா,
கௌரவ ஐக்கிய காரியதரிசி.

# கிராமப் பஞ்சாயத்து.

மாகாண மாதாந்திரப் பத்திரிகை.

சம்புடம் 1.] 1930ஆ டிசம்பர்மீ [இலக்கம் 3.


## கிராம நாட்டாண்மை.

கிராமத் தலைமை என்னும் முக்கியமான விஷயத்தைப் பற்றி இந்திய விவசாயத்திற்காக அமைக்கப்பட்ட இராயல் கமிஷன் மிகவும் விரிவாக எழுதியிருக்கிறது. மனிதனைப் பற்றிய காரியங்கள் எல்லாவற்றிற்கும் மிகவும் அவசியமாக வேண்டிய பொருள் சரியான திறமை வாய்ந்த மனிதனேயாகும். மற்ற உதவிகள் எல்லாம் இரண்டாவதாகத்தான். ஆகையால், கிராம வேலைகளுக்குத் சரியான மனிதர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதைப் பற்றி நன்றாய் ஆராய்வது முதன் முதல் செய்யவேண்டிய வேலை ஆகும்.

முற்கால இந்தியக் கிராமங்கள் தங்களுக்கு இயல்பாயுள்ள ஸ்வதந்திரத்தால், தமக்கு வேண்டிய எல்லாவகை வேலைகளையும் தயாராகச் செய்து வைத்துக்கொள்ளும் சக்தி வாய்ந்தவையாயிருந்தன. கிராமத் தலைவன், கணக்கன் அல்லது கர்ணம், காவலாளிகள், நீர்க்கட்டிகள், கிராமப் புரோகிதர், பள்ளிக்கூட உபாத்தியாயர், கிராம ஜோதிஷர், கம்மாளர், குயவர், இடையர், வண்ணார், நாவிதர், வைத்தியர், தாசி, பாடகன் ஆகிய பலவகைத் தொழிலாளிகளின் கூட்டுறவால் அக்கிராமங்கள் தம் சுதந்திர ஆட்சியை நன்கு நடத்திக்கொண்டுவந்தன. மேற்கூறியவர்கள் எல்லாம் வெறும் பெயர்கள் மட்டுமல்ல: கிராமத்தின் உயிர் நிலையாயுள்ளவர்கள்: பிற்கால சந்ததியார்க்கு இலக்கணமாக அமைந்தவர்கள்; தங்கள் தங்கள் வேலைகளில் நிபுணத்துவம் வாய்ந்து, மற்றக் கிராமங்கள் போற்றும் வகையில் வாழ்ந்தவர்கள். இத்தொழிலாளர்களோடு, சமூக ஊழியங்களுக்காகவும், முற்கால ஆசிரம தர்மம் மிகவும் உதவிசெய்ததெனலாம். அனுபவத்தாலும் வயதாலும் முதிர்ந்தவர்கள் சமூக ஊழியஞ்செய்வதற்கென்றே வானப்பிரஸ்தர்களாகவும் சந்நியாசிகளாகவும் ஆனார்கள்: இவ்வித ஆசிரமங்களை இவர்கள் ஏற்கவேண்டுமென்று ஆசிரம தர்மம் விதித்தது. இவ்வகைக் கிராம சமூகத்தில் பரம்பரையாகத் தலைவர் பதவிக்குவரும் கிராமத் தலைவர்கள் மிகவும் மரியாதைக்குரியவர்

களாக விருந்தனர். அத்தலைவர்கள் அடிக்கடி வழக்குகளில் சமாதானஞ் செய்பவர்களாகவிருந்து நாட்டாண்மை செலுத்திவந்தனர். அவ்விதம் அவர்கள் வழக்குகளைத் தீர்க்கும்பொழுது அவசியமானால் கிராமப் பெரியார்களின் பஞ்சாயத்தை உதவியாக அழைப்பார்கள்.

ஆனால் தற்காலத்தில், மிகவும் விரிவான வாழ்க்கையோடும், அதிகப்பட்ட கூட்டுறவோடும்கூடிய இக்காலத்தில் அத்தகைய பழைய நிலைமையை மறுபடியும் உண்டாக்குவதென்பது முடியாததாயிருக்கலாம். வரையறைக்குட்பட்டதும், மிகக் கௌரவம் வாய்ந்ததுமான அப்பழைய நிலைமை மறுபடி வரமுடியாமலிருக்கலாம். ஆனால் நமக்கு இயல்பாகவே அமைந்துள்ள அப்பழைய வாழ்க்கையின் முக்கியாம்சங்களை இன்னும் நமது வாழ்க்கையில் அமைத்து நம் வாழ்க்கையை மிகவும் உயர்ந்ததாக்கிக்கொள்ளலாம். முடியாது என்று கையை விரிப்பது, நம் தேசிய வாழ்வின் பிரச்னைகளை ஒருவகையிலும் தீர்க்காது இனி நாம் நம்முடைய கிராமச் சுயஆட்சியைச் சரியான தலைமையின்கீழ், உயர்ந்த வழியில் நடத்துவதற்கு ஸாதகமான எல்லா முறைகளையும், மிகவும் தைரியத்தோடு செய்யவேண்டும். கிராமங்களின் சுயஆட்சியே இந்தியாவின் சுயஆட்சியாகும். இவ்விதச் சுயஆட்சி ஏற்படுத்துவதில் கால தாமஸம் காண்பிப்பதோ அல்லது தனித்தமனிதர்களுடைய இஷ்டப்படி நடக்கவிடுவதோ, ஆகிய இவைகள் நமக்குக் கஷ்டங்களையே அதிகமாக விளைவிக்கின்றன. கட்டுப்பாடானதும் கட்டாயமானதுமான ஒரு கொள்கையை அனுசரித்தால்தான் நம்முடைய எதிர்காலத்தை நல்ல நிலைமைக்குக் கொண்டுவரலாம்.

அதனால்தான், கிராம நாட்டாண்மை அல்லது தலைமையைப்பற்றி இந்திய விவசாய இராயல் கமிஷன் கூறியுள்ளவைகள் நமக்குக் கொஞ்சம் வகையில் ஸந்தோஷத்தை அளிக்கின்றன. அந்தக் கமிஷனைச்சேர்ந்தவர்கள் மருத்துவ இலாகாவுடையவும் சுகாதார இலாகாவுடையவும் வேலையையும் சோதித்திருக்கிறார்கள். அவர்கள் பூனா ஸேவாஸதன், மலேரியாவைத் தடுப்பதற்காக வங்காளத்தில் ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய சங்கம், ஒய். எம். ஸி. ஏ., கிராமப் புனருத்தாரண சங்கம், முதலிய சங்கங்கள் செய்த வேலைகளையும் பார்வையிட்டார்கள். அவர்கள், ஜனங்கள் ஐக்கிய உணர்ச்சியுடனிருக்க வேண்டுமென்பதை நன்கு அறிந்துள்ளார். அவர்கள் "புனருத்தாரணம் செய்வது முடியாதகாரியமானால், கிராமங்களின் நிலைமையை மாற்றலாம் என்னும் நம்பிக்கையை அறவேயொழித்துவிடலாம்" என்கிறார்கள்.

அதே சமயத்தில் அவர்கள் விவசாயிகள் மட்டுமே, சரியான பக்கத் துணையின்றி, முற்காலக் கிராம ஐக்கிய வாழ்க்கையைப் புனருத்தாரணஞ்செய்ய முயலுவதும் முடியாத காரியம் என்பதையும்



16209



நன்குணர்ந்துள்ளார்கள். அவ்வுதவி என்ன, எப்படிக்கிடைக்கும் என்பதே இப்பொழுதுள்ள பிரச்னைகளாகும்.

பஞ்சாப் மாகாணத்திலுள்ள கூர்கோன் ஜில்லாவில் மிஸ்டர் பிரேயாம், ஐ. ஸி. எஸ்., என்பவரால் அமைக்கப்பட்ட 'கிராம வழிகாட்டிகள்' என்னும் அமைப்பைப்பற்றி இராயல் கமிஷன் மெம்பர்கள் ஆமோதித்துப் பேசுகிறார்கள். அவர்கள், அவ்வகை முறையைப்பற்றிச் சொல்வதை அப்படியே நாம் இங்கு எழுதுகிறோம். "இளைஞர்களுக்கு, சுகாதார முறைகள், அவசியமான முதற்ச்சிகிச்சைகள், ஐக்கியக் கூட்டுறவு, விவசாய முன்னேற்றம், சில சிறு கைத்தொழில்கள் ஆகிய இவைகளைத் தாத்தக்க பயிற்சி கொஞ்சகாலம் அளிக்கப்படுவதாலும், அவர்களுக்குக் கௌரவம்வாய்ந்த கிராம நிர்மாணத்தைப் பற்றி வேண்டியவரை அறிவுறுத்துவதாலும், அவ்விளைஞர்கள் எந்தக் கிராமத்தில் வசிக்க நியமிக்கப்படுகிறார்களோ அந்தக் கிராமத்திற்கும் அடுத்த கிராமங்களுக்கும் சரியான 'குரு, பந்து, நண்பன்' என்னும் நிலைகளில் விளங்குகிறார்கள். ஆனால் நுட்பமானவிஷயங்களில் ஆலோசனை அவ்வழிகாட்டிகளே சொல்வதில்லை; அவர்கள் சரியான ஆலோசனை எங்கே கிடைக்கும் என்பதை மட்டுமே சொல்லுகிறார்கள். இவ்வித ஸ்தானம், கூர்கோன் ஜில்லாவில் கிராமப் புனருத்தாரணம் செய்வதற்காகவுள்ள நியமனத்தின் ஒரு பகுதியாகும்.

மேற்கூறப்பட்ட நியமனம் கிராம வேலைகளில் சம்பந்தமுடைய எல்லா கவர்ன்மெண்ட் இலாக்காக்களின் வேலையையும் செய்யுந்தன்மையுடையது. பல வேலைகளிலும் நிபுணர்களாயுள்ளவர்களின் அபிப்பிராயங்களை ஜனங்களிடையில் பரப்பி, அவ்வகையில் ஜனங்களுக்கு ஊழியம் செய்கிறது. வேலையில் சித்திபெறுவதற்கு அந்த ஸ்தாபனம், உத்தியோகஸ்தர்களல்லாதவர்கள் அல்லது வேறு யாராகிலுஞ்சரி எவரெவர் மனதோடு உழைக்கிறார்களோ அவர்களின் உதவியையே சார்பாகக் கொண்டுள்ளது. ஜனங்களுடைய தற்போதைய நிலைமைக்கு அவர்களே காரணமென்பதை விளக்க உபந்நியாசங்கள், பாட்டுகள், நாடகம், ஸினிமாப் படக்காட்சிகள், மாஜிக் லாண்டர்ண், லௌட்ஸ்பீக்கர் முதலிய கருவிகளும் இவ்வகையில் கிராம வாசிகளின் கவனம் கவரப்படுகிறது. இவ்விதம் ஜனங்களிடையே அறிவைப் பரப்புவதோடு, அவர்களுக்கு அறிவித்ததை நடப்பில் கொண்டுவருவதற்கு ஸாதகமான எல்லா வசதிகளும் அளிக்கப்படுகின்றன. விதை மாடுகள், தெரிந்தெடுத்த நல்ல காலைகள், தண்ணீர் இறைக்கும் இயந்திரங்கள், கலப்பைகள், கொயினா, அம்மை குத்துதல் முதலியவைகள் வேண்டியபோது கிடைக்கும். ஐக்கிய சங்கங்கள், வயதானவர்க்காயுள்ள பள்ளிக்கூடங்கள், வீட்டில் செட்டாக வாழ்வதற்கு அனுசரிக்கவேண்டிய முறைகள் ஆகியவைகளும் இன்னும் பலவும், அவர்களுக்கு வேண்டியபோது தட்டின்றிக்கிடைப்ப

தால், அவர்கள் மற்றவரை எதிர்நோக்காது தமக்கு வேண்டியவைகளைத் தாமே செய்துகொள்ள எல்லா வசதிகளும் அமைந்துள்ளன.

இவ்விதம் உபயோகப்படக்கூடிய எல்லாச் சாமான்களும் வெகு சுலபமாகக் கிராமவாசிகளுக்குக் கிடைக்கின்றன. கிராம நிர்மாண வேலைகளில் விருப்பங்கொண்டவர்களின் ஐக்கியப்பட்ட முயற்சியால் கிராமக்களுக்கு நன்மை தரத்தக்க எல்லா விஷயங்களும் எத்துணை எளிதில் கிடைக்கின்றதென்பதே இங்கு நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம். இங்குக் கூறப்பட்ட ஸ்தாபனம் கிராமங்களில் குரு, பந்து, நண்பனாகவும் இருக்கக் கூடிய ஒருவனை ஏற்படுத்துவதற்கே ஆகும். ஆகையால் இவனுக்கும், ஐக்கியசங்கங்கள் செய்யும் கிராமப் புநருத்தாரண வேலைகளுக்குக் நியமிக்கும் ஊழியனுக்கும் விசேஷ வித்தியாசமில்லை. என்றாலும் மேற்கூறப்பட்ட முறையில் ஒரு சிறு, பலமற்ற இடமும் இருக்கிறது: அதாவது, இந்த முறை, ஒவ்வொரு கிராமத்திலும் வழிகாட்டி என்ற ஒரு புதிய முறை, ஒவ்வொரு கிராமத்திலும் வழிகாட்டி என்ற புதிய ஊழியனை சேர்க்கிறது கிராம வழிகாட்டியாக உபாத்தியாயரே இருந்தால் அத்துணை கஷ்டமில்லை. ஆனால் அவன் புது மனிதனாக இருக்கும் விஷயத்தில், இம்முறையைக் கையாளுவதில் மிக்க உற்சாகமில்லாத கிராமங்களுக்குப் பணச் செலவுக்கு காரணமாகும். இவர்கள் சரியான பண வருவாயோடில்லாதபடியாலும் இவர்கள் ஒரு வேளை கிராமத்தாருக்கு வேண்டிய எல்லா விஷயங்களிலும் உதவி செய்ய முடியாது: ஆனால் கிராமபுநருத்தாரணத்துக்காக உழைக்கிற ஏஜெண்ட் இதற்கென்றே நியமிக்கப்பட்டவர்: எந்தக்காலத்திலும் உதவிசெய்யத் தயாராயிருப்பவர் சில கிராமங்களுக்குப் பொதுவாக ஏற்பட்டவர் கல்வியிலும் மேலானவர். இந்த வித்தியாசத்தை விவசாய இராயல் கமிஷன் அறிந்திருக்கலாம். ஆகவே அவர்கள் கிராம உபாத்தியாயரே இவ்வித வழிகாட்டிகளாகவுமிருப்பது கூடுமானதா என்பதை ஆராய்ச்சி செய்து பார்த்தார்கள்; ஆனால், கிராம உபாத்தியாயருக்கு, சிறுவர்களைக் கவனிப்பதிலேயே பொழுது சரியாகப் போகிறதென்ற முடிவுக்கு வந்தார்கள். அதனால் அவர்கள் முற்கால வழக்கத்திலிருந்த நாட்டாண்மை என்னுந் தலைமையை மறுபடியும் வழக்கத்தில் கொண்டுவரலாமென்று ஆலோசித்தார்கள். அவ்விஷயத்தில் அவர்கள் சொல்லுவதாவது, "அநேகக் கிராமங்களில் பட்வாரி, கரணம், முதலியவர்கள்போன்ற வரி வசூலுக்காக ஏற்பட்ட கீழ்தர ரிவினியூ உத்தியோகஸ்தர்கள் அநேகர் இருக்கிறார்கள்: சிலவிடங்களில் இவர்கள் கொஞ்சக்காலத்துக்குச்சரியான பயிற்சியும் கொடுக்கப் படுகிறார்கள். அவர்களுக்குப் பயிற்சி கொடுக்கும் பொழுது, கிராம நிர்மாண வேலைகளைப்பற்றியும் போதிப்பது திருப்திகரமான முறையாகலாம். அவ்விதம் ஆயிரக்கணக்கான கீழ்த்தர உத்யோகஸ்தர்கள இருப்பதால், அவர்களுக்குக் கிராம நிர்மாண முறை





களைப் போதிப்பது மிருந்த பலனுடையதாகும்: இராயல் கமிஷனர்கள் எழுதிய இந்த விஷயம் எல்லாக் கவர்ன்மெண்டாரும் கவனிக்கவேண்டியது. ஆகையால் பஞ்சாப் கவர்ன்மெண்டார், தங்கள் கீழுள்ள பட்வாரி என்னும் ரெவினியூ உத்தியோகஸ்தர்களை இவ்வித முறையில் கொஞ்சகாலம் சேர்த்து பின்பு சேர்க்காதது ஆச்சரியப்படத்தக்கதேயாகும். கிராமப்பஞ்சாயத்துக்களை மறுபடியும் வெகு சீக்கிரத்தில் ஏற்படுத்துவது வெகு நன்மையானது, கிராமமுன்சீப், கர்ணம் கிராம உபாத்தியாயர் முதலியவர்களுக்குக் கொஞ்சகாலம் கிராம நிர்மாண வேலைகளிலும் கிராம வாழ்க்கையின் தேவைகளிலும் பயிற்சி அளிக்கவேண்டும். அதோடு, கிராமப்பஞ்சாயத்தார் முதலியவர்களை, கிராமப் புநருத்தாருணக் கமிட்டியார், விவசாய இலாக்கா, கல்வி இலாக்கா, ஆபீசர்கள் மற்றும் கிராம முன்னேற்றத்தில் ஊக்கத்தோடு உழைப்பவர்கள் இவர்களோடு நெருங்கிய சம்பந்தமுடையவர்களாகச் செய்ய வேண்டும். ஆகவே எல்லா வகையிலும் முயற்சி செய்வதை ஐக்கியப் படுத்தினால் கிராமங்களில் வளர்ச்சி மிகவும் பலமடையும்.

ஆகையால் கிராமப்பஞ்சாயத்தார், கிராம உபாத்தியாயர், கர்ணம் நாட்டாண்மை முதலியவர்களே முதன் முதலில் கவனிக்கப்படவேண்டியவர்கள். இவர்களுக்குச் சரியான பயிற்சி கொடுப்பதற்கு ஒரு ஸ்கீம் ஏற்படுத்தினால், கிராமங்கள் மிகவும் நன்மை யடையுமென்று எதிர்பார்த்தால், மிகையாகாதென்று நம்புகிறோம்.

கல்வி, சுகாதாரம் வைத்தியம், கூட்டுறவு, விவசாயம், முதலிய அபிவிருத்தி இலாகாக்கள் தனித்தனியாக சிறு தீபம்போல ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமான கல்வியை பிரசாரம் செய்ய பார்ப்பது பயனில்லை. கிராமப் புநருத்தாரண காரியங்களுக்காக மாகாணத்திற்கெல்லாம் ஒரே திட்டம் ஏற்படுத்தவேண்டும். இவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரே முகமாக கிராமங்களில் நாட்டாண்மக்களாயிருக்கும் கிராம முனிசீப் கரணம், உபாத்தியாயர், பஞ்சாயத்தார்கள், கூட்டுறவு ஊழியர்கள், இவர்களுடன் வாரத்தில் ஒரு முறையாகிலும் சேர்ந்து பிரபோதமளித்து ஊக்கம் ஊட்டினால் பெரிதும் உபகாரமாகும். கிராமங்களுக்குச்சென்று சாத்தியமான வரையில் பிரசாரம் நடத்தலாம். கல்வி, சுகாதாரம், வைத்தியம், கூட்டுறவு, விவசாயம் இந்த இலாக்காகளுக்கு ஜில்லாத் தலைவர்களும், ஜில்லா போர்டுத் தலைவரும், ஜில்லா பஞ்சாயத்தாபீசரும் மேலும் இரண்டு பேர் உத்தியோகஸ்தவரல்லாதவரும், கிராமப்புநருத்தாரணத்திற்கு ஜிலலா சங்கமாக ஏற்படலாம். உத்தியோகப் பற்றற்றவரல்லாத இருவரில் ஒருவராவது முழுநேரமும் கிராமங்களுக்காக உழைப்பவராகவிருத்தல் அவசியமானது: அவரே மேற்கூறிய கமிட்டிக்கு (ஸிக்றட்டறி) காரியதரிசியாக விருக்கவேண்டும். இந்தத் தலைவருக்கு முதல் கிலாஸ் ஜில்லா ஆபீஸருடைய மதிப்பு கொடுக்கப்பட்டு கிராம

உத்தாரணத்தற்குரிய கல்விப் பிரசாரத்தை கவனிக்கச்செய்யவேண்டும். பிரசார வேலைகள் ஸம்பந்தப்பட்டமட்டில், சுகாதார இன்ஸ்பெக்டர்களும், கோவாபரேடிவ் ஸூப்ரவைஸர்களும் மதுவிலக்குப் பிரசாரதாரும் மேற்கூறிய கமிட்டியின் அதிகாரத்துட்பட்டவர்களாயிருத்தலும் அவசியமானது. மதுவிலக்குச் சங்கத்தார் இந்தக் கமிட்டியோடு சேர்ந்து ஒன்றாகிவிடலாம்: மதுவிலக்குச் சங்கத்தாரின் பணத்தோடு இன்னும் கொஞ்சம் சேர்த்து கிராம உத்தாரணப் பயிற்சி அளிப்பதற்காகச் செலவு செய்ய வசதியுண்டாகும். இக்கமிட்டிகளின் தலைமை ஸ்தாபனம் மாகாணத் தலை நகரில் அமைக்கப்படவேண்டும். அந்த ஸ்தாபனத்திற்கு மாகாணத்திலுள்ள மூன்று மந்திரிகளும், அவர்களுடைய காரியதரிசிகளும், லோகல் போர்டு இனிஸ்பெக்டர்களும் முன்னேற்ற இலாக்காக்களின் தலைவர்களும், முன்கூறிய ஜில்லாக் கமிட்டியின் தலைவர்களும் அங்கத்தினராவார்கள்: இந்த ஸ்தாபனமே ஜில்லாக் கமிட்டிகளின் வேலையைச் சரிபார்த்து வருவதோடு, கிராம நிர்மாணத்திற்கும் உத்தாரணத்திற்கும் உதவக்கூடிய ஸினிமாச்சுருள்கள், படங்கள், இலக்கியம் இவற்றையும் பரிசோதித்து அநுமதிப்பார்கள்.

---

## நமது நிலக்கடலைப் பயிர்.

நமது நிலக்கடலைப் பயிர் வெகு விரைவாக வளர்ந்தோங்கி வந்திருக்கிறது. நாம அதில் ஒரு பாகத்தை நமது தேசத்திலேயே உபயோகிக்கிறோம். ஆனால், அது மிகவும் சொல்பம். இதற்குக் காரணம் வெகு தெளிவானதே. இந்தப் பயிரின் விளைவு, அது விளையும் இடங்களிலேயே அதிகமாக உபயோகிப்பதற்குப் போதுமானபடி, நாம் நம்முடைய கைத்தொழில் முயற்சிகளில் முன்னேற்றமடையவில்லை. ஆகையால், நமது விவசாயிகள், மேல்நாட்டுக் கைத்தொழில் வியாபாரத்தின் வளர்ச்சிக்கும் தாழ்ச்சிக்குமேற்றவாறு இலாபமோ நஷ்டமோ அடைகிறார்கள்.

நிலக்கடலையைச் சம்பந்தப்பட்ட மட்டும், அதை அதிகமாக ஏற்றுமதிசெய்கிற நாடுகள் முறையே, பிரிடிஷ் இந்தியா, ஸெனிகல், சீனா, நைஜீரியா, காம்பியா, மோசாம்பிக், கீழ் டச்சு இந்தியா, தாங்கனீக்கா, பிரஞ்சு கினியா, ஆங்கிலோ ஈஜிப்ஷியன் ஸூடான், ப்ரஸில், என்னும் நாடுகளேயாம். நமது தேசம் 1,676,871,000 பவுன் நிறை நிலக்கடலை ஏற்றுமதி செய்கின்றது. இதற்கடுத்தபடியாக, ஸெனிகல், 900,000,000 பவுன் நிறைபெறுமான நிலக்கடலையும், சீனா தேசம் 500,000,000 பவுன் நிறை பெறுமான நிலக்கடலையும் ஏற்றுமதிசெய்கின்றன. இதர தேசத்தார் நிலக்கடலை ஏற்றுமதியில் மிகவும் பின்னிட்டு நிற்கிறார்கள். 1918-ம்





வருஷத்தில் நமது ஏற்றுமதி—அதாவது, 1909-ம் வருஷத்திலிருந்து 1913-ம் வருஷமட்டும் சராசரியாக—813,149,000 பவுன் நிறைபெறுமானதாயிருந்தது. ஸெனிகல், அதே வருஷங்களில் சராசரியாக 425,937,000 பவுன் நிறைபெறுமான நிலக்கடலையும், சீனா தேசம் சராசரியாக 138,472,000 பவுன் நிறைபெறுமான நிலக்கடலையும் ஏற்றுமதி செய்துவந்திருக்கின்றன. ஆகையால், இந்தக் கணக்கின்படிப் பார்க்கும்பொழுது, 1913-ம் வருஷத்திலிருந்து இன்றைக்கு நம்முடைய நிலக்கடலை ஏற்றுமதி இருபங்கு அதிகமாகிவிட்டதென்று காணலாம். நிலக்கடலை பயிராகும் நிலங்களின் விஸ்தீர்ணத்தைப் பார்த்தாலும் நாம் வெகு விரைவாக முன்னேறியிருக்கிறோம் என்று தெரிந்துகொள்ளலாம்.

| வருஷம். | | இந்தியா முழுவதிலும். | ஏக்கர்கள். |
|---|---|---|---|
| 1880 | ... | ,, | 112,000 |
| 1895—1896 | ... | ,, | 407,000 |
| 1913—1914 | ... | ,, | 2,100,000 |
| 1914—1915 | ... | ,, | 2,413,000 |
| 1918 | ... | ,, | 1,312,000 |
| 1922—1923 | ... | ,, | 2,533,000 |
| 1926—1927 | ... | ,, | 3,863,486 |

நிலக்கடலை ஏற்றுமதியின் எண்ணிக்கையிலிருந்து, இந்தியாவானது தன்னோடு போட்டிபோடுகிற நாடுகளோடு ஏற்ற விகித ரீதியாக முன்னேறி வந்திருக்கிறது என்று எண்ணலாமெனினும் நிலக்கடலையைப் பற்றிய உண்மையை அந்த வழியாக நிலைநிறுத்த முடியாது. நம்முடைய நிலக்கடலைப் பயிர் அதை இறக்குமதி செய்து கொள்ளும் நாடுகளையும் அவற்றின் தேவையையும் பொறுத்திருக்கிறது. நிலக்கடலையை அதிகமாக இறக்குமதி செய்து கொள்ளும் நாடுகளில் பிரான்சே முக்கியமானது

பிரான்சு தேசத்து இறக்குமதி விவரம் :—

| வருஷம். | | இறக்குமதியின் ஏற்றத் தாழ்ச்சி. | நிலக்கடலை பவுன் நிறை. |
|---|---|---|---|
| 1913 | ... | | 1,239,659,000 |
| 1918—1927 | .. | கிரமமான ஏற்றங்கள். | 1,503,887,000<br>1,516,515,000 |
| 1927 | ... | தாழ்ச்சி. | 1,454,257,000 |
| 1928 | ... | ஏற்றம். | 1,727,894,000 |

ஆனால், நம்முடைய தேசத்திலோ, 1913-ம் வருஷத்திலிருந்து 1928-ம் வருஷத்திற்குள்ளாக ஏற்றுமதி இரட்டித்துவிட்டது. பிரான்சு தேசம் 1913-ம் வருஷத்தில் இறக்குமதி செய்துகொண்ட நிலக்கடலையின் மூன்றிலொருபாகமே அதிகமாக 1928-ம் வருஷத்தில் இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது.

நிலக்கடலை இறக்குமதியில் இதற்கடுத்தபடியானது ஜெர்மனி தேசமாகும். அதன் இறக்குமதி வெகுவிரைவில் அதிகரிக்கத் தொடங்கியது. 1913-ம் வருஷம் அதன் இறக்குமதி 174,970,000 பவுன் நிறையாகும். 1927-ம் வருஷம் அதன் இறக்குமதி 930,555,000 பவுனாக அதிகரித்தது. ஆனால் 1928-ம் வருஷத்தில் அத்தேசத்தின் இறக்குமதியின் தொகையைப்—1,883,601.000 பவுன்—பார்க்கிறபோழுது அது நம்பமுடியாதபடி மிகவும் அதிகரித்துக் காணப்படுகிறது. நிலக்கடலை இறக்குமதி செய்து கொள்ளும் இதர நாடுகளாவன, இத்தாலியா, ஐக்கிய மகாராஜ்யம், ஹாலந்து அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள், ஜப்பான், டென்மார்க்கு, கனடா, பிரிட்டிஷ் மலாய், பெய்ஜியம், ஈஜிப்த் என்பனவாம். நிலக்கடலை இறக்குமதியின் மொத்தத் தொகை மிகவும் அதிகரித்திருக்கிறது என்பது உண்மையே. நாம் ஜர்மனி தேசத்தோடுள்ள வர்த்தகத்தில் அதிகமாகப் பங்கு பெற்றிருக்கிறோம் என்பதை மறுக்க முடியாதெனினும், தற்காலம் அதிகமாக இறக்குமதி செய்துகொள்ளுகிற தேசங்கள் தங்களுடைய சொந்த நிலங்களிலேயே நிலக்கடலைப் பயிரும் செய்து கொள்ளுகின்றன என்பதை நாம் மறந்து விடக்கூடாது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாடுகளைப் பார்ப்போமாயின், அவை 1929-ம் வருஷம் 930,700,000 பவுன் நிறைபெறுமான நிலக்கடலையைத் தம் சொந்த நிலங்களிலிருந்தே அறுவிடை செய்து கொண்டன. உண்மையைக் கூறுமிடத்து, மேற்கு அஸ்திரேலியாவின் விவசாய இலாகாவின் அறிக்கைப் பத்திரிகையில் கண்ட விஷயங்களை நாம் ஒப்புக் கொள்ளக் கூடுமாயின், அமெரிக்க விவசாயி சீனாதேசத்து நிலக்கடலை விவசாயியோடு போட்டிபோடக்கூடிய நிலமைக்கு வந்துவிட்டான். அமெரிக்க அரசாங்கத்தார் நிலக்கடலை விவசாயிக்கு, தோடோடுகூடிய ஒரு டண் நிறையுள்ள நிலக்கடலைக்கு 1 £-14 s 6 d. வீதமும், தோடு நீக்கிய ஒரு டண் பருப்புக்கு 3 £-9 s வீதமும் பொருளுதவி செய்து வருகிறது. ஆனால், ஆஸ்திரேலியாவிலோ, தோடோடு கூடிய ஒரு டண் நிலக்கடலைக்கு 37 £-6 s.-8d வீதமும், தோடுநீக்கிய ஒருடண் பருப்புக்கு 56 £. வீதமுமாக விவசாயிக்கு உதவிசெய்து வருகிறது. இதை ஆதாரமாகக்கொண்டு, உஷ்ணதேச விவசாய விஷயமாக யோசனை கூறுகிற மேற்கு ஆஸ்திரேலிய விவசாய அதிகாரி, நிலக்கடலைப் பயிர் அபிவிருத்திக்காக முயற்சி செய்ய இதுவே தக்க சமயமென்று அறிக்கையிட்டிருக்கிறார். ஆஸ்திரேலியா தேசத்தில், ஒரு டண் நிறையளவான முதல் தர நிலக்கடலைக்கு 84 £ , அதாவது மணங்குக்கு பதின்மூன்று ரூபாய் வீதம்போன ஸெப்டம்பர் மாதம் விலை இருந்தது. ஆனால் இந்தியாவிலோ விவசாயிகள், அந்த நாட்டில் நிலக்கடலை விற்பனையாகிய அதே மாதத்தில், முதல் தரமான ஒரு மணங்கு நிலக்கடலையை 10 அணாவுக்கும் 15 அணாவுக்கும் அதிகமான விலைக்கு விற்கமுடியவில்லை.





நம்முடைய தேசத்தோடு நிலக்கடலை விஷயமாக இதர தேசத்தார் போடுகிற போட்டி விஷயமாக இன்னொரு முக்கிய விஷயம் கவனிக்கிறதற்குண்டு. அதாவது, நிலக்கடலை எண்ணெயின் பரஸ்பர தேசிய வர்த்தகமேயாகும். நாமும் நிலக்கடலை எண்ணெய் எடுக்கிறோம். எனினும் அது முற்றிலும் கசட்டு எண்ணெயாகவே இருக்கின்றது. எனினும், அதன் பெரும்பாகமும் நாம் சாப்பிடுகிற நெய்யில் கலப்பதற்காவது, இலங்கை, மொரிஷியஸ் முதலான இடங்களில் இருக்கிற நம்முடைய சகோதரர்களுக்கு நல்லெண்ணெய் என்ற நாமதேயத்திலே அனுப்புகிறதற்காவது உபயோகப்படுகிறது. பரஸ்பர தேசிய வர்த்தகத்தில் நம்முடைய நிலக்கடலை எண்ணெய் வர்த்தகம் ஒரு பொருட்டாகக் கருதப்படுகிறதில்லை. நிலக்கடலை எண்ணெயை முக்கியமாக ஏற்றுமதி செய்கிற நாடுகளாவன, சீனா, பிரான்சு, ஜர்மனி, கீழ் டச்சு இந்தியா முதலியனவாகும் ஜெர்மனியும் பிரான்சும நிலக்கடலையை இறக்குமதி செய்து கொள்ளுவதினாலே, அவற்றை ஒழித்துத் தம்மிடத்திலே உள்ள நிலக்கடலையைத்தாமே ஆட்டி எண்ணெய் எடுத்து, அந்த எண்ணெயை இதர தேசங்களுக்கு ஏற்றுமதிசெய்கிற சீனா, கீழ் டச்சு இந்தியா என்னும் நாடுகளின் வர்த்தகம் நம்முடைய நிலக்கடலை வர்த்தகத்தையும் பாதிப்பதாயிருக்கிறது. சீனா தேசம் 1928-ம் வருஷம் 78,889,000 பவுன் நிறையளவான எண்ணெயும் அதே வருஷத்தில் கீழ் டச்சு இந்தியா 9,974,000 பவுன் நிறையளவான எண்ணெயும் ஏற்றுமதி செய்தது; ஆனால் பாருங்கள், பிரான்சு தேசமானது இறக்குமதி செய்துவரும் நிலக்கடலையிலிருந்து வருஷந்தோறும் 40,000,000 காலன் எண்ணெய் எடுக்கின்றது.

ஏற்றுமதி இறக்குமதியின் தொகைகள் நமக்கு எதைக்காட்டினாலும் காட்டாவிட்டாலும், அவை ஒழுங்கு செய்யப்படாத இந்திய விவசாயிகளின் நிலைமையினால் ஏற்பட்டிருக்கிற அவர்களுடைய பலவீனத்தை நமக்குத் தெளிவாகக் காட்டுகிறது. நிலக்கடலையை வாங்குகிற தேசத்தாரும், மிகவும் சீராகத் தமது காரியங்களை ஒழுங்கு செய்துகொண்ட நிலக்கடலைப்பயிர் செய்யும் தேசத்தாரும் தமது நிலக்கடலையை மூன்று இரகங்களாக வகுத்துக்கொண்டிருக்கிறார்கள். அவை, (1) தின்பண்டங்கள் செய்வதற்கானது; (2) வறுத்தற்குகந்தது; (3) ஆட்டுவதற்குகந்தது, என்பனவாம். நிலக்கடலையின் சில சிறந்த உபயோகங்களாவன, பச்சடி செய்தல், மருந்திற்கு உபயோகித்தல், வெகு வேகமாக ஓடுகிற யந்திரங்களுக்குக் கொழுப்புண்டுபண்ணுதல், எரிவதற்கு உபயோகித்தல், நெய் செய்தல், என்பனவாம். மட்டமான நிலக்கடலைப் பருப்புகளைச் சவுக்காரம் செய்வதற்கும், இதரக் கைத்தொழில் காரியங்களுக்கும் உபயோகிக்கிறார்கள். பிரான்சு தேசத்தார் நம்மிடமிருந்து வாங்குகிற நிலக்கடலையைச் சவுக்காரம் செய்வதற்கு மட்டுமே உபயோகிக்

கிறார்கள். நம்முடைய நிலக்கடலை விவசாயிகளுக்கு மத்தியஸ்தர்கள், தரகர்களுடைய உதவியில்லாமல் தாமாகவே தமது நிலக்கடலையைத் தாம் வகுத்து விற்பனைக் செய்யத் தெரியவில்லை. நிலக்கடலையின் விலை மதிப்பு வியாபார விஷயங்கள் அனைத்தும் கொள்ளையடிக்கும் நோக்க முடைய அன்னிய நாட்டு வர்த்தகக் குழுவினரிடம் பரமரகசியங்களாக உலவிவருவதினால், நமது விவசாயிகளுக்கு நிலக்கடலையின் விலைமதிப்பு விஷயங்கள் ஒன்றும் தெரியவில்லை.

நாம் நம்முடைய நிலக்கடலையை ஆட்டி எண்ணெயாகச் செய்வதில்லை என்று குறை கூறுவதிற் பயனில்லை. பிரான்சு தேசத்தார் மட்டும் எப்படி நம்முடைய நிலக்கடலையை ஆட்டி வருஷந்தோறும் கோடிக் கணக்கான மரைக்கால்களாக எண்ணெய் எடுக்கிறார்கள் என்று கேட்பதும் அதிக பிரசங்கமாகும். நிலக்கடலையைப் பயிர்செய்கிற நாம் மற்றவர்களைப்போல அதை உபயோகப் படுத்திக்கொள்ளக் கூடாமலிருக்கிறோம். நாம் பயிர் செய்கிற நிலக்கடலையை நாமே உபயோகப்படும் படியான பொருள்களாக மாற்றத்திறமை யற்றிருக்கும் பொழுது, நிலக்கடலைப் பாதுகாப்பிற்காகக் கூச்சலிடுவது புத்தியீனமாகும்.

சர்க்கார், செல்வ ஆட்ச்சிக்கடாத விதமாக நிலக்கடலை யேற்றுமதியினால் நமது தேசத்திற்கு மட்டுமல்ல, இவ்வுலகில் உள்ள தேசங்களுக்கெல்லாமேற்படுகிற நஷ்டத்தையும் அழிமதியையும் தடுத்து நிறுத்தி, விவசாயிகளுக்குப் போதுமான கல்வியளித்து அவர்களை ஒன்றுகத் திரட்டி ஒழுங்குபடுத்தி, நிலக்கடலையை ஏற்றவாறு உபயோகிப்பதற்கான முறை ஏற்பாடுகள் செய்ய இனிச் சற்றும் தாமதிக்கலாகாது. இவ்வாறெல்லாம் செய்யாவிட்டால், இந்த உலகில் அதிகமாக நிலக்கடலை ஏற்றுமதி செய்கின்ற நம்முடைய விவசாயிகள் மிகவும் ஏழையாகவும் திறமை சற்றுமே இல்லாதவர்களாகவும், நாளடைவில் திருப்தியற்றவர்களாகவும் இருப்பார்கள் என்பதும் ஆச்சரியமாமோ ?

---

## எக்ஸ்சேஞ்சு பத்திரிகைகள்.

கீழ்கண்ட பத்திரிகைகளை நம்முடைய பத்திரிகைக்கு அந்தந்த பத்திராதிபர்கள் அனுப்பி யிருக்கிறதற்கு நாம் வந்தன மளிக்கிறோம்.

(1) கிராமணி
(2) கல்கத்தா முனிசிபல் கஸட்டு
(3) (வங்காளி) பள்ளி சுராஜ்
(4) (மராத்தி) பூனா முனிசிபல் கஸட்டு
(5) ரூறல் இந்தியா
(6) கிராம முன்னேற்றம்



## பத்திராதிபர் குறிப்புகள்.

**நிலத் தீர்வை விபாகம்.**

லோக்கல் போர்டு ஆக்டினால் பொறுப்புறுத்தப்பெற்ற நிலத்தீர்வையில் ஆறிலொருபங்கு கிராம அபிவிருத்தி நிதிக்குக் கிடைக்கின்றது. முடிவாக இது பஞ்சாயத்து வேலைக்காக விபாகிக்கப்படுகிறது. பஞ்சாயத்தாருக்கே ஆறிலொரு பங்கு கிடைக்கின்றது. மொத்தமாக மூன்றிலொரு பங்கு பஞ்சாயத்திற்கென்று வினியோகிக்கப் படுகிறது. ஆட்சி சௌகரியத்திற்காக, 1930-ம் வருஷத்து அமண்டுமெண்டு ஆக்ட்டி (சட்டம் 9-ம் 12-ம்) னுள் புகுத்தப்பெற்ற அவஸ்தாந்திரப் பிராப்தியான ஏற்பாடுகள் சர்க்காருக்குச் சில அதிகாரங்களைக் கொடுக்கின்றன. பொதுவிதியாகிய 12-வது விதியை ஏதாவது தாண்டக்கூடாத கஷ்டங்கள் வருகிறபொழுது உபயோகித்துக் கொள்ளலாம். அவஸ்தாந்திரப் பிராப்தியான ஏற்பாடுகளில் தப்ப வழியில்லாதபோது மட்டுமே 12-வது விதியைக் கையாடலாகும் 9-வது விதி திட்டமாக நிலத்தீர்வைத் தொகையின் விபாகத்தைப் பற்றியதாகும். அமெண்டுமெண்டு ஆக்ட் அமுலுக்கு வந்த வருஷத்து நிலத்தீர்வையைத் தாலூக்கா போர்டுகளுக்கும் ஜில்லா போர்டுகளுக்கும் பஞ்சாயத்துகளுக்கும், கிராம அபிவிருத்தி நிதிக்கும் லோக்கல் கவர்ன்மெண்டாருடைய பொதுவான, அல்லது, விசேஷமான கட்டளை கூறுகிறபடி விபாகித்துக் கொடுப்பதற்கு 9-வது விதியில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது. இந்த விதியானது நிலத்தீர்வையை ஒரு தனிக் குழுவுக்கோ அல்லது குழுவுகளுக்கோ ஒப்படைக்கிற விஷயத்தைச் சிந்திக்க இடம் கொடுக்கிறதில்லை. அல்லது, கிராம அபிவிருத்தி நிதிக் கமிட்டிகள் ஏற்படக்கூடாதென்றாவது அந்தக் கமிட்டிகள் வேலைச் செய்யக்கூடாதென்றாவது அந்த விதிசிந்திக்க இடம் கொடுக்கிறதுமில்லை. வேண்டுமாயின் வீதங்களை மாற்றுவதற்காவது, அல்லது, விசேஷித்த சந்தர்ப்பங்களில் தேவைக்கு ஏற்றவாறு, தாலூக்கா, ஜில்லா போர்டுகளுக்கும் பஞ்சாயத்தாருக்கும் சம வீதமாக நிதியை விபாகித்துக் கொடுப்பதற்காவது சர்க்காருக்கு அதிகாரம் கொடுப்பதற்கான தீர்மானங்கள் அந்த விதியில் அடங்கியிருக்கின்றன.

எனினும், சர்க்கார் மிகவும் அசாதாரணமான முறையைக் கைக்கொண்டிருக்கிறார்கள். எல் அண்டு எம் 4339-ம் நப்பர் ஜீ ஓ.-வின் படி ஒவ்வொரு ஜில்லாவிலும் தண்டப்படுகிற நிலத்தீர்வை வருமானத்தை, அந்த அந்த ஜில்லாக்களில் ஜில்லா போர்டுகளுக்கும் தாலூக்கா போர்டுகளுக்கும் விபாகம் செய்துவிட வேண்டுமென்றும், அமெண்டுமெண்டு ஆக்ட் ஏற்படாதிருந்தால், விபாகம் எவ்வாறு நிறைவேற்றப்படுமோ அவ்வாறே நிறைவேற்றப்பட வேண்டுமென்றும் சர்க்கார் கட்டளையிட்டிருக்கிறார்கள். எந்தக் கோர்ட்டாராவது அவஸ்தாந்திரப் பிராப்தியான ஏற்பாடுகள் விஷயமாக சர்க்காருக்கு எதிராக ஒரு கட்டளைப்பத்திரம் விட முடியுமோ என்பதைக் குறித்து நாம் சந்தேகிக்கிறோமாயினும், சர்க்காருடைய அதிகாரத்தைப் பற்றி இவ்வாறு வியந்து கூறுதல் மிகவும் அளவு கடந்ததேயாம் என்று மிகவும் தெளிந்துரைக்கலாம்.

சர்க்கார், தங்களுக்கு எவ்விதமான கஷ்டங்களும் வரக்கூடாது என்ற முன் ஜாக்கிரதையோடு இவ்வாறு கட்டளைகள் பிறப்பித்து வருகிறதாகத் தோன்றுகிறது. பஞ்சாயத்தாருக்குத் தீர்வை வருமானம் வரக்கூடியதாயிருக்கிற சந்தைகள் இதர சங்கங்கள் விஷயமாகவும் சர்க்கார் பின் தங்குதலான ஒரு சட்டத்தைப் பிறப்பித்து எத்தகைய தற்செயலான வழிகளையும் அடைத்துவிட்டார்கள். சர்க்கார், தற்காலத்திற்காவது பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களுக்கான மூலதனப்புக்கிராண்டுகளை மறுத்துவிட்டார்களென்று மற்றோரிடத்தில் வெளியிட்டிருக்கிற ரெஜிஸ்டார் ஜெனரலுடைய 95-வது சுற்று விளம்பரத்திலிருந்து தெரிய வருகிறது.

இப்பொழுது, சர்க்கார், பஞ்சாயத்தாருக்கு நிலத் தீர்வையில் விபாகம் கொடாதிருக்கிற இந்தக் கட்டளையைப் பிறப்பித்திருக்கிறார்கள். அப்படியானாலும், சர்க்கார், லோக்கல் போர்டு ஆக்டை அமுலுக்குக்கொண்டு வந்து பஞ்சாயத்தின்மேல் சட்ட சம்பந்தமான கடமைகளைச் சுமத்தியிருக்கிறார்கள். அது மட்டுமன்று; அவர்கள், தேர்ந்தெடுத்தல்களை எதிர்கொண்டு, பஞ்சாயத்தார் மேல் தேர்ந்தெடுத்தல் சம்பந்தமாக அதிகாரிகளுக்கும், விதிமுறைப்படிக்கான ஏற்பாடுகளுக்கும் ஆகிற செலவுகளை யெல்லாம் சுமத்தும் மதிகாரங்களைக் கைக்கொண்டு, அதற்குத் தேவையானப் பணத்தைக் கொடாவிட்டால் அதை லோக்கல் பாடிகளிடமிருந்து வசூலிக்கும் அதிகாரத்தையடையவும் தீர்மானித்திருக்கிறார்கள்.

பஞ்சாயத்துக் காரியாலயங்களை நடத்தற்குத் தேவையான அற்பச் செலவுகளுக்குக்கூட, பஞ்சாயத்தாருடைய வருமானம் அதிகரிப்பது அவசியமாயிருக்கிறது. அப்படியிருக்க, சர்க்கார் செய்யத் தொடங்கியிருக்கிறபடி எல்லாவற்றையும் நடப்பிக்கத் தொடங்கினால் ஏற்கனவே ஏற்பட்டிருக்கிற பஞ்சாயத்து முறையைக் கொன்றுவிடுவதோடு, இனிமேலாவது ஏற்படும் பஞ்சாயத்துகளை அதைரியப்படுத்துவதாகவுமிருக்கும். மகாகனம் பொருந்திய பஞ்சாயத்து மந்திரி அவர்கள் டிசம்பர் மாதம் 5-ம் தேதி ரோடரி கிளப்பில் பேசியபோது, பின் வரும் வார்த்தைகளாலே தம்முடைய மனவிருப்பமான சிந்தனைகளை வெளியிட்டிருக்கிறார்; "கிராமப்பஞ்சாயத்தைக் கூட்டி ஏற்படுத்துகிற விஷயத்தில் நாம் எம்மட்டும் செய்திருக்கவேண்டுமோ அம்மட்டும் செய்யவில்லை," என்கிறார். அவர் எதிர்க்கட்சியின் தலைவராய் இருந்தபொழுது, ஒவ்வொரு கிராமத்திலும் பஞ்சாயத்து ஏற்பாடு செய்யவேண்டுமென்று வற்புறுத்திவந்தார். நாம் இதுகாறும் கூறிப்போந்த கட்டளைகள் அவருடைய முதிர்ந்த யோசனையின் முடிவு அன்று, என்று நாம் இன்னும் நம்பியிருக்கிறோம். அந்தக்கட்டளைகள் முறை யொழுங்குகளின் வழக்கப்படித் தாமாகவே ஏற்பட்டவைகளாய் இருத்தல் கூடும். அவர் திரும்பவும் இரு விஷயங்களைத் தீரவிசாரிக்கவேண்டுமென்று நாம் அவரைக் கேட்டுக்கொள்கிறோம் ஜில்லா போர்டுகள் தாலூக்கா போர்டுகளது தீவிர ஒழுக்கத்தை அவர் அதிகமாக வற்புறுத்திக்கொண்டிருக்கக் கூடாதென்று நாம் அவரைக் கேட்டுக்கொள்ளுகிறோம். அந்த போர்டுகளுக்குத் தத்தமக்கிருக்கிற கஷ்டங்கள் உண்டு. அந்த போர்டுகளின் பலவீனம் என்று சொல்லா விட்டாலும், அந்தக் கஷ்டங்களே அமெண்டுமெண்டு ஆக்டில் கண்டிருக்கிற பஞ்சாயத்து உரிமைகளின் போக்கைச் சுருக்கிக் குறைப்பதற்கு முக்கிய ஏதுவாய் இருந்திருக்கலாம். ஜில்லா போர்டுச் தாலூக்கா போர்டும் கொடுக்கக்கூடிய உத்தமமான உதவியைப் பெற்றுக்கொள்வதோடு, பஞ்சாயத்து அபிவிருத்தியடைந்து இதர லோக்கல் பாடிகளோடு அயல்



சார்பாக ஒத்துவேலை செய்யப்போதுமானபடி சர்க்கார் இடம் கொடுப்பதே உத்தமமானதாகும். தம்மளவிலே அதிக ஆட்சி அதிகாரம் பெற்ற அயலாரால் பஞ்சாயத்து நெருக்கப்பட்டு மடிந்து போகாதவாறு அதைப் போஷித்து வளர்ப்பதில் சர்க்காருக்கு அதிகக் கவலை இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

---

**தென்னிந்திய வியாபார சங்கத்தாரின் தீர்மானங்கள்.**

அடுத்த பிப்ரவரி மாதத்தில் புதிய டெல்ஹி நகரில் கூடுவதாக நிச்சயம் செய்திருக்கும் இந்திய வியாபாரச் சங்கங்களின் கூட்டத்தில், தென்னிந்திய வியாபாரச் சங்கம் விவசாயிகளின் நலத்துக்கு ஏற்றதான சில தீர்மானங்கள் கொண்டுவரப்போவதாக அறிவித்திருப்பதை நாம் ஸந்தோஷத்துடன் அறிகிறோம். இரயில்வேக்களில் உள்நாட்டுப் போக்கு வரவுக்குள்ள சார்ஜை குறைக்கும் வழிகளை ஆராய்ந்து அறிவிக்கவும், இந்தியாவில் சாகுபடியாகும் சாமான்களை விற்பதற்குச் சரியான மார்கெட்டுகள் ஏற்படுத்தவும், ஏற்றுமதிச் சாமான்களின் குணங்களை நியதிப் படுத்துவதற்கும், அந்நிய வியாபாரிகளின் ஐக்கியத்தினால் நம் நாட்டு வியாபாரிகள் கொள்ளையடிக்கப் படாமலிருக்கவும், தாவர நெய்யின் மேலும், மற்ற விவசாய வஸ்துக்களின் பேரிலும் பௌண்டு ஒன்றுக்கு ஒரு ரூபாய் வீதம் வரி விதிக்கவும் மற்றும் பல விஷயங்களை ஆராய்ந்து ரிப்போர்ட்டு செய்யவும் தென்னிந்திய சங்கத்தார் பிரதிநிதித்துவம், வாய்ந்த கமிட்டி ஒன்று நியமிக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்.

பஞ்சு அனுப்புவதற்குள்ள சார்ஜை குறைக்கும் விஷயமாக கடந்த 3-ம் உ கவர்ன்மெண்டார் புது டெல்ஹியிலிருந்து வெளியிட்ட அறிக்கையானது ரெயில்வேக் கட்டணங்களைக் குறைப்பதற்குள்ள மார்க்கங்களை ஆராய்வதை மிக முக்கியமான பிரச்னையாக்கிவிட்டது. வருஷ வரும்படியில் 45 லக்ஷம் ரூபாய் குறைந்துவிடுமென்பதற்காக ரெயில்வேக் கட்டணங்களை உயர்த்தி வைத்திருக்கிறதென்பது சரியான ஸமாதானமல்ல. உலக வியாபாரமும் விலையும் குறைந்துவிட்டது: சமுசாரி தான் ஸகிக்கவேண்டிய நஷ்டங்களால் நசுக்கப்படுகிறான். பருத்தி பயிரிடும் விஸ்தீரணத்தைக் குறைத்துக்கொண்டு தானியங்களை அதிக இடங்களில் பயிர் செய்வதும், இருக்கும் நிலைமையை ஒருவிதத்திலும் விருத்தி செய்யாது ஏனென்றால் தானியங்களின் விலை இன்னும் குறையலாம், அதனால் அவன் பண வருவாயும் மட்டுப்படலாம். அதனால் இரயில்வேக்கள் தம் வரும்படியை வேறு வழிகளில் சரிப்படுத்திக்கொள்ள வேண்டுமேயன்றி, சாமான்களின் மேலுள்ள கட்டணங்களை இப்போதிருக்கும் உயர்ந்த ரேட்டிலேயே வைத்திருக்கக்கூடாது இந்தியச் சமுசாரிகளே, அந்நிய வியாபாரிகளையும் அந்நியநாட்டு உத்தியோகஸ்தர்களையும் கணக்கில்லாத அந்நிய வியாபார சம்பந்தத்தையுப், தம் செலவில் போஷிக்கவேண்டியிருக்கிறதென்ற எண்ணத்தை மனதில் வைத்துக்கொண்டு கவர்ன்மெண்டார் அந்நியர்கள் லாபமடைவதற்குள்ள வழிகளைக் கொஞ்சம் குறைத்தார்களானால் இந்தப் பிரச்னைகளையெல்லாம் வெகு சுலுவில் தீர்த்துவிடலாம். தற்காப்புக்கு மட்டுமாகவேனும் இந்திய கவர்ன்மெண்டார், மற்ற நாடுகளில் உண்டாகும் சாமான்களுக்கு அதிகக் கட்டணம் விதிக்கவேண்டுவது அவர்கள் கடமையாகும். ஆனால் அவர்கள், "பொது ஜனங்கள் உபயோகிக்கும் மேனாட்டு சாமான்களின் விலை சீக்கிரம் உயரும்" என்ற பதில் அளிக்கக்கூடும். அது ஒருவகையில் சரியான

பதில் என்று ஸம்மதிக்கவேண்டியதே. ஆனால், அப்படி விலைகள் உயரும்பொழுது, வாங்குபவர்களும் விவசாயிகளும் ஆகிய இருவரும் ஒன்றுபோல நஷ்டப்படவேண்டி வரும் அதற்குத் தக்கபடி வாங்குவதும் மட்டுப்படும். மட்டம் சாமான்களே அதிக விலையாகலாம் அல்லது அத்தியாவசியமல்லாத சாமான்கள் வாங்கப்படாமல் இருப்பின் நின்றுவிடலாம். தேவையைக் குறைத்துக்கொள்வதால் நஷ்டம் ஒன்றும் ஏற்படாது.

சாகுபடியாகும் சாமான்களுக்காக ஏற்படுத்தும் மார்க்கெட் தற்காலம் நுட்பங்கள் மிகவும் நிறைந்த தொன்றாகிவிட்டது. எல்லாக் காரியங்களும் ஆராய்ச்சியே அதிகத் தேவையாகிவிட்டது. விவசாயத்திற்குப் புதிதாகவுள்ள கானடாவும் ஆஸ்திரேலியாவும் மிகவும் முன்னேற்றமடைந்துவிட்டன : அமெரிக்காவைப் பற்றியோ ஒன்றுமே சொல்லவேண்டுவதில்லை. இந்தியச் சமுசாரி நிலைநிற்க வேண்டுமாயின் கவர்ன்மெண்ட் மாத்திரமல்ல, விவசாயிகளும் விழிப்போடு கூட்டுறவு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

விவசாயிகள் அந்நிய நாட்டு வியாபாரிகளால் கொள்ளையடிக்கப்படுவதென்பது ரொம்பவும் விசாரகரமான உண்மை. நமது மாகாணத்தில் வேர்க்கடலை வியாபாரம் முழுவதும், ராலிபிரதர்ஸ், லூயிட்ரெபஸ் என்ற (உதாரணமாக) இரண்டு அந்நிய வியாபார கம்பெனிகள் கையில் தற்காலம் இருந்து வருகிறது. வால்காட் பிரதர்ஸ் என்னும் கம்பெனி தற்காலம் வேர்க்கடலை வியாபாரத்தை நிறுத்திவிட்டார்கள். இக்கம்பெனிகள் விவசாயிகளுக்கு நன்மை செய்யவேண்டுமென்று எவ்வகையிலும் கட்டுப்பட்டவர்களல்லர், அவர்களுடைய ஏஜெண்டுகள் கடமையோ இன்னும் குறைவு. நம்முடைய பெரிய வியாபாரிகளெல்லாம், இவர்களிடமிருந்து மிகுந்த பரிசுகளை எதிர்பார்ப்பது போல இவர்கள் வாசலில் வந்து காத்திருக்கவேண்டி இருக்கிறது. அந்நிய வியாபாரிகளின் ஏஜெண்டுகள் நம்மோடு சமான நிலையில் வியாபாரஞ் செய்யும் வியாபாரி அல்ல. அவர்களை நாம் எல்லா வகையிலும் திருப்திப்படுத்த வேண்டியிருக்கிறது. நிரங்குசமாய் பிரவிர்த்திக்கும் கவர்ன்மெண்டு அதிகாரிகளின் சமமாக இவரும் ஒரு அதிகாரியாகவே நடக்கிறார். அவனுடைய சிபாரிசு கவர்ன்மெண்ட் அதிகாரிகள் சிபாரிசுபோல விலை பெற்றது பயன் தரத்தக்கது. இவ்விதக் கஷ்டங்களெல்லாவற்றிலுமிருந்து, விவசாயியும் தனித்த வியாபாரிகளும் நீங்குவதற்கான முயற்சிகளைச் செய்யவேண்டிய நாள் முன்னேயே வந்துவிட்டது.

முக்கியமாக வேர்க்கடலையிலிருந்தும், மற்ற எண்ணை வித்துக்களிலிருந்தும் தயார் செய்யும் தாவர நெய் வியாபாரத்வை மிகுதியும் குறைத்துவிட்டது. நமது மிகவும் முக்கியமான வியாபாரம், முக்கிய தேவை, துணி வியாபாரம், அந்நியநாட்டார் கையில் போய்விட்டது உணவுப்பொருள்களின் விஷயத்திலாகிலும் நாம் நம்போக்கில் விடப்படுவோம் என்று எதிர்பார்த்தோம் ஆனால் அதுவுமில்லை. காப்பி, டீ, வழக்கம், அந்நிய நாட்டு கொள்ளைக்காரனை அடுப்பங்கரை வரையில் கொண்டு வந்து விட்டுவிட்டது. தாவர நெய்யோ அவனை நம் உணவின் முக்கியப் பொருளைக் கொண்டுவந்துவிட்டது, இவைகளின் இறக்குமதியைத் தடுக்க முடியாவிட்டால் இவைகளுக்குத் தடைவரி யாவது விதிக்கும் நாள் வந்தாயிற்று



## பத்திராதிபரின் குறிப்புகள்

**பஞ்சாயத்து யூனியன்கள்.**

நாமக்கல் ஜில்லாவில், புதிய ஆக்டின்படி ஒரு பஞ்சாயத்து ஐக்கிய சங்கம் (பஞ்சாயத்து யூனியன்) கூடியதென்பதை மிகுந்த சந்தோஷத்தோடு அறிவிக்கிறோம். அதைப்பற்றியுள்ள ரிப்போர்ட்டு முதலிய விஷயங்களை வேறோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். ஷை யூனியன், லோகல் போர்டு திருத்த ஆக்ட் 30-வது பிரிவின்படி அமைக்கப்பட்டது: அது பஞ்சாயத்துக்கள் பலசேர்ந்த ஒரு கமிட்டி ஆகும். அதன் அமைப்பு, அதில் அடங்கிய பஞ்சாயத்துகளால் அநுமதிக்கப்பட்ட முறையில் ஆனதாகும். இந்தப்பஞ்சாயத்துக்களுக்கு பொதுவாகவுள்ள காரியங்களைச் செய்யவும் பொதுவாகவுள்ள பாத்தியதைகளை நடத்தவும் ஷை டிஸ்டிரிக்டு சங்கத்துக்கு அதிகாரம் இருக்கும். மேலும் 'இது பஞ்சாயத்தார்களுக்கும், பஞ்சாயத்துக்களுக்கும் இடையில் நேர்ந்த விவாதங்களைத் தீர்ப்பதற்கும் ஒரு சிறந்த ஸ்தாபனமாவதோடு, பஞ்சாயத்து அமைப்பையும் அவற்றின் உபயோகத்தையும் விருத்திசெய்யும். 30-வது பிரிவின்படி திவான் பஹதூர் R. ராமச்சந்திர ராவ் C.S.I., ராவ்சாஹிப் வெங்கடராமையர் முதலியவர்கள் இதில் இப்போது சேர்ந்திருப்பதே, பஞ்சாயத்து ஸ்தாபனங்கள் மிக விரைவில் விருத்தியடையுமென்பதற்குப் போதுமான அறிகுறியாகும்.

---

**பெருத்த அபாயம்.**

வங்காளத்தில் 4089 யூனியன் போர்டுகள் இருக்கின்றன : அவற்றின் வேலைகளைக் கவர்ன்மெண்டார் விமர்சை செய்தபொழுது எழுதியதில கீழ் கண்ட விஷயம் கவனிக்கப்படத்தக்கது :—" ராஜீய கிளர்ச்சி விஷயங்களை ஒரு பக்கம் வைத்தாலும், முக்கியமான அபாயம் என்னவென்றால், யூனியன் போர்டுகள் வரியை அதிகப்படுத்துவதற்காகவே ஏற்படுத்தப்பட்டதென்ற ஒரு தவறான நம்பிக்கை ஜனங்களிடையில் பரவியதே. மிகவும் உற்சாகமுள்ள சில யூனியன் போர்டார் முதன் முதலாகச் சில முன்னேற்ற வேலைகளுக்காக வரியை அதிகப்படுத்தியதே இதற்கு காரணமாகலாம். இனி அவ்விதம் நேராதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். மிகுந்த பலனைத்தரக் கூடியதல்லாததும் கிராமத்தார் சரியானதென்று கொள்ளாததுமான வேலைகளுக்காகப் வரிவிதித்துப் பணம் சேர்ப்பதைவிட, மிகவும் அவசியமான தேவைகள் என்னென்னவென்பதை முதலில் நன்கு கவனித்தபின் அவசியமானால் ஸெக்ஷன் 37, 13-யில் கூறியபடி யூனியன் போர்டுகள் நடந்துகொள்வதே உசிதமானது என்பது கவர்ன்மெண்டாரின் கொள்கை" என்று அவர்கள் கூறுகிறார்கள்.

மேற்கூறிய கொள்கை மிகவும் சரியானதென்றும் அதனால் இம்மாகாணத்தில் உள்ள பிரத்தியேகமான சாஸ்திர கொள்கையுள்ள ஆபீஸர்கள் (ஸ்பெஷலிஸ்டு ஆபீசர்கள்) அதைக் கவனிப்பார்களென்றும் நம்புகிறோம். வங்காளத்தில் 1928-29-ம் வருஷத்தில் பொண்டுகள்படகுத்துறைகள் மூலமாகவுள்ள வருமானமட்டும் 173,000 ரூபாய் என்பதை இங்கு குறிப்பிடவேண்டியிருக்கிறது. இம்மாகாணத்திலுல்ல ரெவினியூ அதிகாரிகள் பஞ்சாயத்தாரின் உரிமைகளை இன்னும் கவனிக்கவில்லை. பொண்ட் வருமானத்தையும் கவர்ன்மெண்டார் வெகுசீக்கிரம் பஞ்சாயத்தாரிடம் ஒப்படைத்து விடுவார்களென்று எதிர்பார்க்கிறோம்.

---

**சமீபத்தில் நேர்ந்த புயலும் வெள்ளமும்.**

சென்னை மாகாணத்திற்கு நவம்பர் மாசம் பிற்பகுதி மிகக் கஷ்டகாலமாக விருந்தது. காற்றாலும் மழையாலும் சேதங்கள் சென்னை நகரையும் மற்ற விடங்களையும் அநேக வகைகளில் கஷ்டப் படுத்திவிட்டன. இவைகளெல்லாம் இயற்கையின் சக்தியை ஞாபகப்படுத்தும்குறிகளே; என்றாலும் மனிதரைப்பற்றியமட்டிலும் மிகக்கொடுமையைவே: ஏனெனில் அவற்றால் ஏழைகளே மிகுதியும் கஷ்டமடைகிறார்கள். ஆயிரக்கணக்கான, கஷ்டமடைந்த ஜனங்களுக்கு நாம் மனப்பூர்வமாகப் பரிதாபம் காண்பிப்பதோடு, பகட்டில்லாத வகையில் அவர்கள் நலத்துக்சாக உழைத்து உதவியவர்களுக்கு நம்மனப்பூர்வமான வந்தனங்களை அளிக்கிறோம்.

இக்கஷ்டங்களை மனங் கலங்காமல் ஸஹித்துக்கொண்டு கடவுளின் இஷ்டத்துக்கு விரோதமில்லாமல் நடக்க, நமக்கு வேண்டிய பலத்தையும் திடத்தையும் ஈசன் அளிக்குமாறு அவரை வேண்டுகிறோம்.

**சுற்று விளம்பரம்.**

நாம் லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டர் அவர்களுடைய 99-வது சுற்று விளம்பரத்தை விசேஷமாகக் கவனிக்குமாறு பஞ்சாயத்தாரை வேண்டிக்கொள்கிறோம். அவர் கிராமப் பஞ்சாயத்துத் தீர்வை விஷயமாக நடபடிக்கை செய்து அது விஷயமான விவரணைகளை வெளியிட்டிருக்கிறார்.

---

# காட்டுப் பஞ்சாயத்து.

கீழ்கண்ட விஷயதானம் 1930-ல் அக்டோபர் மாதம் 23-ம் தேதி ஸ்டேட்ஸ்மன் பத்திரிகையில் வெளிப்போந்த ஒரு சங்கிரகமாகும். சென்னையில் அக்டோபர் மாதம் 4-ம் தேதி நடந்த காட்டுப் பஞ்சாயத்துக் கான்பிரன்சின் அக்கிராசனாதிபதி யாகிய மா-ா-ா-ஸ்ரீ வி. ராமதாஸ் பந்துலுகாரு அவர்களுடைய பிரசங்கத்தின் விவேசனமாகும். நாம் அந்தப் பிரசங்க விவேசனத்தைச் சென்னையிலெம் பத்திரிகையோடு உலவிவரும் 'மதராஸ் மெயிலி'ன் பார்வையில் வைத்து, அவர்கள் அதைக் கவனிக்குமாறு வேண்டுகிறோம். ஏனென்றால், அந்தப் பத்திரிகை, அக்காலத்தில், ஸ்ரீமான் பந்துலு அவர்களில் சட்ட நிரூபணங்களை வகுக்க விரும்பும் ஒரு வைக்கீலின் தன்மையைத் தவிரவேறொன்றையும் எதிர்பார்க்க முடியாத நிலையிலிருந்தது. அப்பொழுது காட்டுப் பஞ்சாயத்து விஷயமாக வெகு விவரமாய் பத்திரிகைகளில் ராமதாஸ் அவர்கள் நோக்கத்திற்கு ஏற்கனவே எழுதிக்கொண்டிருந்த மா-ா-ா-ஸ்ரீ ஜி. ஹரிஸர்வோத்தம ராவ் பந்தலு எம். ஏ., அவர்கள் மெயில் பத்திரிகையின் நோக்கத்தில் ஸம்பூர்ண தீவிர வாதியாகவும் மிதம் தவிர்ந்த பாஷை எழுதுகிறதாகவும் கண்டுவந்தார். இப்பொழுதாவது அப்பத்திரிகை தனது அபிப்ராயத்தை மாற்றிக்கொள்ளும் என்று நம்புகிறோம்.

பத்திராதிபர்.





காட்டுப் பஞ்சாயத்துக்கள்.

மதராஸ் மாகாணத்திலுள்ள காடுகள் 1882-ம் வருஷ மிடப்பட்ட சட்டத்தையனுசரித்தும் கவர்ன்மெண்டார் அப்போது அப்போது செலுத்தும் அதிகாரங்களுக்குட்பட்டும் ஆண்டு வரப்படுகின்றன. கிராமத்தார் இக்கோட்பாடுகளுக்கிணங்கியே நடக்கவேண்டியதாயிருக்கின்றது. மற்றுமனேக மாகாணங்களிலும் காட்டாட்சி தொந்தரவுக்கிடையானதொரு விஷயமாகவேயிருக்கின்றது. ஆனால் ராமதாஸ் பந்துலு அவர்கள் கூறுகிறவாறு இவ்விஷயம் மதராஸ் மாகாணத்திலேயே வெகு தர்க்கத்திற்கிடமான தன்மைகளையுடைத்தாயிருக்கின்றது. ராமதாஸ் அவர்கள் சமீபத்தில் மைலாப்பூரில் கூடின மதராஸ் காட்டுப் பஞ்சாயத்துச் சபையில் அக்கிராசனம் வகித்தபோது, அவர் மதராஸ் மாகாணத்துக் காட்டுப் பஞ்சாயத்துச் சபைகளின் பரிபாலன வழிகளை எடுத்துரைத்தார். அவர் கூறியதிலிருந்து அம்முறைகள் முழு சீர்திருத்தமடையவேண்டியது அவசியமானதென்று நமக்கு விளங்கும். அவர் கூறுகிறபடி தற்கால ஆளுகையின் நிலையைப்பார்க்கும்பொழுது சிற்சில மாற்றங்கள்மட்டும் போதாது, அது முழுதுமே மாற்றமடையவேண்டும். இம்மாற்றத்தை ஏற்படுத்த கவர்ன்மெண்டார் தம் நோக்கங்களையே மாற்றவேண்டியது அவசியமாகும்.

ஜனங்கள் அரசாங்கத்துக் காட்டு இலாக்கா ஆளுகையிலுள்ள குற்றங்களையும் அதனால் கிராமக்குடிகளுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் எடுத்து முறையிட்டதின்பேரில் 1912-ம் வருஷம் மதராஸ் கவர்ன்மெண்டார் அக்குறைகளை விசாரணை செய்யும்பொருட்டுக் கமிட்டியொன்றை ஏற்படுத்தினர். விசாரணையின் முடிவில் கமிட்டியார் ஜனங்கள் முறையிட்ட குறைகள் உண்மையென்றும் அவைகளை நீக்கக் காட்டு இலாக்கா உத்தியோகஸ்தர்களுக்கும் கிராமக்குடிகளுக்குமுள்ள சம்பந்தத்தை கூடியுமட்டும் குறைக்கவேண்டுமென்றும் மொழிந்தனர். அதாவது இப்பொழுது கவர்ன்மெண்டார் ஒரு கிராமத்தின் உபயோகத்திற்காகக் காடுகளில் தடுத்துவைத்திருக்கிற பாகங்களை அக்கிராமத்தார்களின் முழு ஆளுகைக்கே விடவேண்டும். இவ்வாறு செய்வதால் குடிகளுக்கு வேண்டிய புல், விறகு, மற்ற காட்டுப் பொருள்களும் தவறாது கிடைத்துவரும் அதனால் குடிகள் தமக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டியவைகளைப்பெற்றுத் திருப்தியடைவர், அரசாங்கத்துச் சிப்பந்திகளுக்கும் தமக்குமுள்ள மனஸ்தாபங்களும் நீங்கும். கவர்ன்மெண்டார் கமிட்டியாரின் சிபார்சிகளை அங்கீகரித்து அதன்பேரில் காட்டுப் பஞ்சாயத்துச் சபையை ஏற்படுத்தினர். இவ்வாறே இப்பொழுதுள்ளக் காட்டுப் பஞ்சாயத்துச் சபைகள் வெளிவந்தன. தற்காலம் மதராஸ் மாகாணத்தின் 22 ஜில்லாக்களில் 1100 காட்டுப் பஞ்சாயத்துச் சபைகள் சுமார் 3000 சதுர மைல்கள் விஸ்தீர்ணமுள்ள காடுகளை ஆண்டு வருகின்றன. ஆனால் இப்பஞ்சாயத்துச் சபைகள் ஏற்பட்டதுமுதல் இத்தனை வருஷங்களுக்குப் பிறகும் அவைகளால் விசேஷ நன்மைகள் கிராமத்தாருக்கு ஏற்படவில்லை என்று பந்தலு அவர்கள் கூறுகிறார். இதற்குமுன் கிராமத்தார் காட்டு இலாக்கா உத்தியோகஸ்தர்களின் ஆளுகைக்குக் கீழ்ப்பட்டிருந்தனர்; இப்போது பஞ்சாயத்துத் தாசில்தாரின் அதிகாரத்திற்குட்பட்டிருக்கின்றனர்

தற்காலப் பஞ்சாயத்து ஏற்பாட்டின் முக்கியகுறை என்னவெனின் அது தாழ்ந்த கக்ஷியாருக்கு அதாவது கிராமத்தாருக்கு ஏற்றதாக விருக்கவில்லை. பஞ்



3

16209

சாயத்தார் தம் செலவுபோக மீந்ததை மாகாண கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பந்துலு அவர்கள் சொல்லுகிறார்,

"பஞ்சாயத்தார் கவர்ன்மெண்டாருக்குக் கொடுக்கவேண்டிய தொகை ஓர் அளவுக்கு மேற்பட்டிருக்கின்றது. மேலும் பஞ்சாயத்தார் காடுகளைப் பயிர்செய்து அதனால் கிடைக்கும் லாபங்களையும் கவர்ன்மெண்டாரே எடுத்துக்கொள்ளுகிறார்கள். மற்றொரு குற்றம் காடுகளைக் குத்தகைக்கு விடுதலில் தாமதமும் குத்தகைப் பணத்தில் ஒரு கணக்கின்மையுமாகும். கவர்ன்மெண்டார் குத்தகைப் பணத்தை அடிக்கடி மாற்றுவதினாலும், அதை முன்கூட்டியே வாங்கிக்கொள்வதினாலும் பஞ்சாயத்தாருக்குக் காடுகளை அபிவிருத்தி செய்வதில் ஊக்கக்குறைவு ஏற்படுகின்றது. "பஞ்சாயத்தார் டாடுபட்டுக்காடுகளை அபிவிருத்தி செய்ததினால் உண்டாகும் லாபங்கள் கிராமத்தாருக்கே செல்லவேண்டும். கவர்ன்மெண்டார் இச்சபைகளால் லாபமடையவேண்டுமென்னும் கருத்தை யொழிக்கவேண்டும். குத்தகைப்பணம் குறைவாகவும், சர்தாக்களாகவும் பெற்றுக்கொள்ளப்படவேண்டும். கவர்ன்மெண்டார் அதை அடிக்கடி அதிகமாக்கக்கூடாது." பந்துலு அவர்கள் சொல்லுவதிலிருந்து, காட்டுப் பஞ்சாயத்துச் சபைகளை ஏற்படுத்து முன்னர் கவர்ன்மெண்டாருக்குக் கிடைத்த லாபம் இப்பொழுது கிடைக்கும் லாபத்தைவிட அதிகமாயிருப்பதற்குக் காரணம் இதுவென்றே புலப்படும்.

"ஜனங்களின் பயனுக்காகவேயன்று கவர்ன்மெண்டார் பயனுக்காகவன்று காடுகள் சம்பந்தமான இச்சட்டத்தை நாங்களிடுகிறோம்," என்று மதராஸ் கவர்ன்மெண்டார் 40 வருஷங்களுக்குமுன் வெளியிட்ட மொழியானது இப்பொழுதுள்ள நிலைமைக்கு விரோதமாகவேயிருக்கின்றது.

---

## டாடிபள்ளிகூடம் தாலூக்கா கான்பரென்ஸ்

மேல்கோதாவரி ஜில்லாவில் பாதம்பூடி கிராமத்தில் இந்த நவம்பர் மாதம் 23-ம் தேதி டாடிபள்ளிக்கூடம் தாலூக்கா பஞ்சாயத்தின் சங்கத்தின் மகாநாடு நிறைவேற்றது. அந்த ஜில்லா போர்டின் தலைவரான பி. பெத்திராசு பி.ஏ., பி.எல். அவர்கள் அக்கிராசனம் வகித்தார். அவர் தம்முடைய உபந்நியாசத்தில் முன்காலத்து பஞ்சாயத்துக்கள் சர்வாதிகாரம் பெற்றிருந்தனவென்றும் ஆகையால் அவைகளே, சிவில், கிரிமனல் எல்லா விவகாரங்களை நடத்தும் சுயாட்சியாக இருந்தனவென்றும் கூறினார். இக்காலத்தில் அவ்வேற்பாடெல்லாம் நேர் விரோதமாகிவிட்டது. அதிகாரத்தினர் பஞ்சாயத்தாருக்கு ஏதோ சில அதிகாரங்கள் கொடுத்தாலன்றி அவைகளுக்கு வேறொரு அதிகாரமுமில்லாமல் இருக்கின்றது. கவர்ன்மெண்டார் கிராம ஜீவனத்தை புனருத்தாரணம் செய்யும்பொருட்டு தற்காலம் சட்டங்கள் செய்து சில அதிகாரங்கள் பஞ்சாயத்துகளுக்கு கொடுத்திருக்கிறார்கள். 1930-ம் ஆண்டு சீர்திருத்தச் சட்டம் பஞ்சாயத்துக்களுக்கு அனேக விஷயங்களில் மிகவும் அனுகூலம்தான். ஆனால் பஞ்சாயத்துக்கள் வைக்கவேண்டிய கணக்குகளும் அனுப்பவேண்டிய ரிப்போர்ட்டுகளும் அனுசரிக்கவேண்டிய அதிகாரிகளும் மிகவும் அதிகமாய்விட்டன. ஆகையால் இவ்விஷயங்களில் சுலப சீர்திருத்தம் செய்துவிட்டு காரியம் நடத்தினால் பஞ்சாயத்துக்கள் மிகவும் நன்றாக விளங்கலாம்.





இது வரையில் அனுபவம் அடைந்த பெரியோர்கள் பஞ்சாயத்துகளுக்குத் தகுந்தபடி உற்சாகம் ஊட்டவில்லை. சில இடங்களில் மாத்திரம் தாலுகா போர்டின் தலைவர்கள் ஊக்கத்தோடு வேலை செய்திருக்கிறார்கள். இனிமேல் எல்லோரும் சிரத்தை எடுக்கவேண்டும்.

நம்முடைய தாய்நாடு விழித்திருக்கின்றது; சுயாட்சிக்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறது. ஆகையால் கிராம வாசிகள் தூக்கத்தில்இருந்து எழுந்து தியான சுதந்திரத்திற்காக முயற்சி எடுத்து கிராமப் பஞ்சாயத்துக்களை சரியாக நடத்தினால் அதிகாரிகள் சுயாட்சி கட்டாயம் கொடுப்பார்கள்.

அக்கிராசனாதிபதியுடைய உபந்நியாசம் முடிவானதின்மேல் மகாநாடு கீழ்கண்ட விஷயங்களைப்பற்றி தீர்மானம் செய்தது.—

(1) கணக்குகள் முன்போலவே இருத்தல்.

(2) பௌண்டுகள் பஞ்சாயத்துகளிடம் இருக்கச்செய்தல்.

(3) மூன்றில் ஒரு பங்கு பணம் பஞ்சாயத்துகள் வைத்தால் மீதி இரண்டு பங்கும் கவர்ன்மெண்டார் வகித்துக் கிராம ரஸ்தாக்கள் சர்வே செய்தல்.

(4) ரூரல் டிவலெப்மெண்டு பண்டு கமிட்டிக்கு தாலுக்கா பஞ்சாயத்துக்கள் பக்ஷமாக பிரதிநிதிகளை தேர்ந்தெடுக்கிறபடி சட்டத்தின் சீர்திருத்தல்.

(5) புறம்போக்குகள், தோப்புகள் முதலியவைகளை பஞ்சாயத்திடம் ஒப்படைத்தல்.

(6) நடக்கும் வருஷத்தில் பஞ்சாயத்துக்கள் பூர்த்திசெய்யும் ரோடு, கட்டடம் முதலிய வேலைகளுக்கு இதுவரைபோல் தாலுக்கா போர்டு ஐந்தில் ஒரு பங்கு கிராண்டு கொடுத்தல்.

---

## இந்தியாவும் ருஷியாவும்.

நமது நாட்டுப்பேரறிஞராகிய ரவீந்திரநாத் டாகூர் மாஸ்கோ நகரத்தில் செய்த பிரசங்கத்தில், கல்வியின் அவசியத்தைப்பற்றி மிகவும் அருமையான சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். "மனித சமூகத்தின் எல்லாப் பிரச்னைகளுக்கும் விடை கல்வியின் அபிவிருத்தியேயாகும். என்னுடைய கவிபாடும் வேலைக்குப் புறமே, நான் மற்றொரு வேலையையும் ஏற்றுக்கொண்டிருக்கிறேன்; அதாவது, என்னாலானமட்டும் எனது தேசத்தாரிடையில் கல்வியைப் பரவச்செய்யவேண்டுமென்பதேயாம். எனது நாட்டு ஜனங்கள் ஒருவர் தவறுவல் யாவரும் படும் துன்பங்களனைத்தும் கல்வியறிவின் குறைவினால் விளைந்தவைகளேயாம். தரித்திரம், பிணி, நோய், சாதிச் சமயச்சண்டைகள் கைத்தொழிலின் தாழ்வு முதலியவையனைத்தாலும் எங்களுடைய வாழ்க்கை முற்றிலும் சிதைந்து அபாயகர நிலையிலிருக்கின்றது. இவையனைத்திற்கும் காரணம் கல்வியின் குறைவேயாகும். இந்தியாவில் நாங்கள் இருக்கிற நிலைமை உங்களுடையதைப் போன்றதேயாம் என்பதை

நீங்களறிவீர்கள். இந்த நாட்டில் நீங்கள் உங்களுடைய விவசாயிகளுக்கு எவ்வளவு சகாயமும் ஊக்கமும் அளிக்கிறீர்களோ, அவ்வாறே பாரத நாட்டு மக்களும் உதவியும் ஊக்கமும் அடைய அவாவி நிற்கின்றனர். விவசாயத்தொழிலை மட்டுமே நம்பி நிற்கும் மனிதர்வாழ்வு மிகவும் நிர்ப்பந்தமான நிலைமையென்றும், அப்படிபட்ட மனிதருக்குக் கல்வியறிவு எம்மட்டும் இன்றியமையாததென்றும் நீங்களறிவீர்கள். துரைத்தனத்தின் வளர்ந்தோங்கும் செலவையும் மனித வாழ்க்கையின் நாளுக்கு நாள் வளர்ந்து ஓங்கிவரும் ஜீவியத்தேவைகளையும் திருப்திப் படுத்த விவசாயப் பொருள்களை வேண்டியவளவு உற்பத்திசெய்தல் கல்விபறவொன்றினாலேயே சாத்தியமாகும்.

நமது ஜனங்கள் ஓயாத கொடும் பஞ்சத்தினால் இடர்ப்படுகின்றனர். இக்கொடிய நிலைமையிலிருந்து எவ்வாறு தப்புவதென்று அவர்களறியாதிருக்கிறார்கள். அவர்கள் தமது மானுஷிகப் பிரகிருதியிலேயே அபிமானமும் விசுவாசமும் இழந்தவர்களாகக் காணப்படுகின்றனர். எங்களுடைய நாட்டிலுள்ள 30 கோடி ஆண் பெண்களின் துர்ப்பாக்கியமான நிலைமை இதுவேயாகும். அவர்கள் எல்லோரும் ஆழ்ந்த அறிவீன இருளில் மூழ்கி, வாழ்க்கை முன்னேற்றக் கதவுகள் அடைபட்டவராகித்திறனைறறுக்கிடக்கின்றனர்.

ஆகையால், நீங்கள் இந்த நாட்டில் இந்தப்பிரச்னையை எப்படி விடுக்கிறீர்கள் என்று கண்டறியவே நான் உங்கள் நாட்டிற்கு வந்திருக்கிறேன். நீங்கள் இந்த நாட்டில் ஒரு காலத்தில் குடிகொண்டிருந்த அறிவீனத்தையும் அஞ்ஞானத்தையும், சோம்பலையும் நீக்க எவ்வாறு முயன்று வந்திருக்கிறீர்கள் என்பதை அறியவே நான் வந்துள்ளேன். நான் கண்டதெல்லாம் சிறிதளவே ஆயினும், நான் பார்த்த மட்டில் இந்த நாடு அடைந்திருக்கிற அபரிமிதமான முன்னேற்றத்தையும் இந் நாட்டில் நீங்கள் செய்திருக்கிற அற்புதத்தையும் நான் தெளிவாய்க் கண்டுகொண்டேன். இவ்வளவு சிறந்த காலத்திற்குள் இந்த நாட்டினர் அடைந்த மனப்பாங்கின் மாறுதலைக்குறித்து மிகவும் அஞ்ஞான அந்தகாரத்திலும் அசக்தியின் படுகுழியிலும் கிடக்கின்ற நாங்கள் அறிவது மிகவும் அசாத்தியமாயிருக்கிறது.

---

## ஸர்குலர்கள்.

### பஞ்சாயத்துக்களின் ரெஜிஸ்திரார் ஜெனரல்.

**ஸர்குலர் நெ. 95, 1930 ம் வருஷம் அக்டோபர் மாதம் 22ந் தேதி பிறப்பித்தது.**

**விஷயம்.**—வில்லேஜ் பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்களுக்கு உபகரணங்கள் ஏற்பட்ட கிராண்டு கவர்ன்மெண்டு ஆர்டர்கள் அனுப்பப்பட்டபடி :

பணக்கஷ்டத்தினால் இந்த வருஷம் கிராண்டுகள் கொடுக்க கவர்ன்மெண்டார் மறுத்து விட்டபடியால், வில்லேஜ் பஞ்சாயத்துக்களே தங்கள் ஆதரவின் கீழ் நடந்துவரும் பள்ளிக்கூட உபகரணங்களுக்காக வேண்டிய பணத்தை தயார் செய்து கொள்ளும்படி இதனால் அறிவிக்கப்படுகிறார்கள்.

இந்த ஆபீசின் ஸர்குலர் நெ. 87 ஆப் 30 ரத்து செய்யப்பட்டிருக்கிறது.

2. இந்த ஆர்டர் புதிதாக அனுமதிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களையும், கடந்த வருஷம் உரிய காலத்தில் கிராண்டு தொகையை வாங்கிக் கொள்ளாத பள்ளிக்கூடங்களையும் பாதிக்கும்.

---





### ஸர்குலர் நெ. 96.

பஞ்சாயத்துகளுக்கு ரோட்டு ஜலவசதி சம்பந்தமான வேலைகளுக்கு 1931ம் வருஷ ஏப்ரல் மீ முதற்கொண்டு சமீபத்தில் திருத்தப்பட்ட லோகல் போர்டுகளின் மசோதாவின் கீழ் ஒவ்வொரு ஜில்லாவிற்கும் ஸ்தாபிக்கப்படும் கிராம முன்னேற்றக் கமிட்டியாரால் (Village Developmeut Committee of the District) கிராண்டு கொடுக்கப்படும். இதுவரையிலும் சாங்க்ஷன் செய்யப்பட்ட கிராண்டுகளைக் கட்டாயமாய் பெற்றுக்கொள்ள விரும்பினால், பஞ்சாயத்துகள் சாங்க்ஷன் செய்யப்பட்ட வேலைகளை 1931-ம் வருஷ பிப்ரவரி மீ முடியுமுன் பூர்த்தி செய்ய வேண்டும். ரிஜிஸ்டிரார் ஜெனரல் அவர்களால் சாங்க்ஷன் செய்யப்பட்டு முடிவு பெறாத வேலைகளுக்கு அடுத்த வருஷம் கிராண்டு சாங்க்ஷன் செய்யும்படி, கிராம முன்னேற்றக் கமிட்டியாருக்கு நான் சிபார்சு செய்தாலும், அக்கமிட்டியார் அவ்விதம் சாங்க்ஷன் செய்வார் என நான் உறுதியாகச் சொல்லமுடியாது. இவ்வருஷம் சாங்க்ஷன் செய்யமுடியாத எஸ்டிமேட்டுகளை அந்தந்த ஜில்லாவின் கிராம முன்னேற்றக்கமிட்டிக்கு அனுப்பி, அப்படி அனுப்பப்பட்டதை சம்பந்தப்பட்ட பஞ்சாயத்துகளுக்குத் தெரிவிக்கப்படும். கிராம முன்னேற்றக்கமிட்டியில் ஜில்லா போர்டு பிரசிடெண்டும் தாலூகா போர்டு பிரசிடெண்டுகளும் அங்கத்தினர்களாவார்கள். நிலத்தீர்வையின் பேரின் விதிக்கப்படும் செஸ்ஸில் (land cess) மூன்று பைசாவும் (அதாவது வசூலிக்கப்படும் செஸ்ஸில் $\frac{1}{6}$), ஜில்லா போர்டு தாலூகா போர்டுகளால் தங்கள் பொது பண்டிலிருந்து கொடுக்கப்படும் தொகையும், பஞ்சாயத்து எல்லைகளிலும் பஞ்சாயத்து ஸ்தாபிக்கப்படாத இதர கிராமங்களிலும் ரோட்டு வசதி, கிராம சுகாதாரச் சீர்திருத்தல் இவைகளுக்கு கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படும் கிராண்டு தொகையும் சேர்ந்து மேற்சொன்ன கமிட்டியின் நிதியாக ஆகும். கவர்ன்மெண்டு பஞ்சாயத்துக்களுக்கென தனியாக இனிமேல் ஒதுக்கி வைக்க மாட்டார்கள். ஆனால், ரிஜிஸ்டிரார் ஜெனரல் துவாராவாக ஒவ்வொரு ஜில்லாவிலும் பஞ்சாயத்துகளால் எவ்வளவு கிராண்டு செலவழிக்கப்பட்டதோ அதற்குத் தக்கவாறு ஜில்லாவில் ஏற்பட்டுள்ள கிராம முன்னேற்றக் கமிட்டிக்கு கவர்ன்மெண்டு கிராண்டு ஒதுக்கி வைக்கப்படும்.

---

### ஸர்குலர் நெ. 97.

1929 டிசம்பர், வில்லேஜ் பஞ்சாயத்து புல்லட்டின் 292 ம் பக்கத்தில் பிரசுரித்திருக்கும் 73-வது ஸர்குலரில், கிராமப் பஞ்சாயத்துக்கள் நிரூபித்துக் காட்டுவதற்காகக் கிடைக்கக் கூடிய மூன்றுவகைக் கலப்பைகளைப் பற்றி அறிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாய இலாக்கா டைரக்டர், இரும்புப் பாகங்கள்மட்டும் விவசாயடிப்போக்களில் ரூ. 12-க்கு வாங்கக்கூடியதும், 'மான்ஸனே டைப்' என்றவைகளைப் போலெல்லாம் உபயோகப்படுவதும் மத்திம கனமுள்ள கூப்பர் கலப்பை நெ. 26 என்னும் தகுதியான கலப்பைகளைத் தெரிந்தெடுப்பதில் வித்தியடைந்ததாகத் தெரிவிக்கிறார். பஞ்சாயத்துக்கள் எட்டெட்டுக் கலப்பைகள்கொண்ட பெட்டிகளாக வாங்குவதானால் விலை ஒவ்வொன்றுக்கும் ரூ. 11-8-0 ஆகக் குறையும். நிரூபித்துக் காட்டுதற்குள்ள ஏற்பாடுகள் வேண்டிய இடங்களில் செய்யப்படும். இந்தக் கூப்பர் கலப்பைகள், மார்க்கெட்டுகளில் ரூ. 20 ஆகவும் அதற்கு மேலும்

விற்கப்படும் 'ஜய்' 'காட்டனூகா' இவைகளையும், இதர மத்திம ரகமுள்ள கலப்பைகளையும் விடமிகவும் விலை குறைந்ததாகும்.

இந்த விவரங்களை வில்லேஜ் பஞ்சாயத்துக்களுக்கு அறிவிக்குமாறு சௌகர்ய ஆர்கனைசர்கள் கோரப்படுகிறார்கள். வாங்க விரும்பும் பஞ்சாயத்து பிரஸிடெண்டுகள் விவசாய இலாகா டெயரக்டரோடு நேரில் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளக் கோரப்படுகிறார்கள்.

---

## ஸர்குலர் நெ 98 D. 6—12—'30.

சர்க்கார், 1926 ஜூலை மாதம் 2-ம் தேதி வெளியிட்ட ஜீ ஓ. நெ. 702-1-ல், பப்லிக் வொர்கஸ் டிபார்ட்மெண்டின் மேற்பார்வையில் இருந்த கால்வாய் வாய்க்கால் புறம்போக்குகளில் உள்ள, காற்றடித்து விழுந்ததும் பட்டுப்போனதுமான மரங்களின் விற்பனை வருமானத்தை எடுத்துக்கொள்ளவும், அந்தப் புறம்போக்குகளில் உள்ள புல்லை அறுத்துக்கொள்ளவும், மரங்களின் பலனை ஆஸ்திகளுக்குச் சேதமில்லாமல் அநுபவிக்கவும், வருஷந்தோறும் 1924—25 முடிவோடு ஐந்து வருஷத்தில் வந்த வருஷாந்திர ரவனியூவின் சராசரித்தொகைக்குச் சரிசமானமான ஒரு தொகையைக் கொடுத்து, தனித்தனிக் குத்தகைக்காரர்களின் மேல் சுமத்தப்பட்டிருக்கிற நிபந்தனைகளின்படி நடந்து அனுபவித்துக்கொள்ளவும், கீழ்க்கோதாவரி, மேல்கோதாவரி கிருஷ்ணா ஜில்லாக்களைச் சேர்ந்த பஞ்சாயத்துகளுக்கு சந்தோஷத்தோடு அநுபவ உரிமைக் கிராண்டு கொடுத்திருந்தனர். இந்தச் சம்மதத்தைப் பெற்ற சில பஞ்சாயத்தார்கள், எதிர்பார்த்த வருமானம் மிகவும் குறைவானதென்று கண்டபொழுது இந்த நிபந்தனைகளின்படி நடக்க மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

மேற்கண்ட கவர்ன்மெண்டறிக்கையின்படி எந்தப் பஞ்சாயத்தாவது மேற்கண்ட விதமாக சம்மதித்த பின்பு அந்தச் சம்மதம் திடமாகயிருக்க வேண்டுமென்றும் தகுந்த நோட்டீசைக் கொடுத்த தமது பாத்தியதை நீக்கினால் தவிர வருஷந்தோறும் கொடுக்கவேண்டிய குத்தகையை கொடுத்துத்தான் ஆகவேண்டுமென்றும் தெரிய வருகிறது. இவ்விஷயத்தில் எந்த பஞ்சாயத்தாயினும் ஒரு தருதி பாத்தியத்தை நீக்கிவிட்டால் முன் சொல்லிய அனுபவ உரிமைகளை மறுபடியும் பெறலாகாது. ஐந்து வருஷத்தின் சராசரி தொகை ஏற்படுத்தல் நல்ல வருஷத்திற்கும் சேர்ந்தே ஆகும். ஆகையால் பஞ்சாயத்துக்கள் இவ்விஷயத்தில் தம்மிஷ்டம்போல் நடக்கலாகாது.

2. காற்றடித்து விழுந்ததும் பட்டுப்போனதுமான மரங்களின் விற்பனை வருமானத்தை யெடுத்துக்கொள்வதற்கு அதிகாரம் மேற்கண்ட கவர்ன்மெண்டு உத்தரவை அனுசரித்து அந்த மரங்களிருக்கும் புறம்போக்குகளை குத்தகைக்கு வாங்கியிருந்தால்தான் கிடைக்கும்.

---





## ஸர்குலர் நெ 99; 6—12—30.

விஷயம்:—வரிகள் வரிவசூல்கள்; கிராமப் பஞ்சாயத்துகள். 1930 ம் வருஷத்து 9-வது ஆக்டின் அமெண்ட்மெண்டின் படிக்கு, லோக்கல் போர்ட் ஆக்டின்கீழ் புரொவிஜர்கள் — இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுக்கப்பட்டது.

ரெஜிஸ்திரார் ஜனரலுடைய அனுமதியின் பேரில் கிராமப் பஞ்சாயத்தார்கள் இதுவரைக் கீழ்கண்ட வரிகளையும் கட்டணங்களையும் வசூலித்து வந்திருந்தார்கள்.

(1) 1920-ம் வருஷத்து சென்னை மாகாணக் கிராமப் பஞ்சாயத்து ஆக்டின் 26 ஸெக்ஷன் 1-வது பிரிவின் கீழ்:—

(ஏ) கிராமங்களிலுள்ள கட்டடங்களின் மதிப்பு விலையின்மேல் வருஷா வருஷத் தீர்வை.

(பி) கிராமங்களில் வருஷாவருஷம் வசூலிக்கப்படும் சில வர்த்தகர்கள், சில தொழில்கள் இவை மேலுள்ள வரிகள்.

(2) 26-வது ஸெக்ஷன் 2-ம் பிரிவின் கீழ்.

குறிப்பிட்ட ஒரு நோக்கத்தோடு வசூலிக்கப்படுகிற குடும்ப வரிபோன்ற அனுமத்து வரிகளும் கட்டணங்களும், குடிமராமத்துக் கட்டணங்கள் முதலானவைகளும்—கிராம ஸமுதாயத்தாருக்கு உகந்ததும் ஏற்றதுமெனப் பஞ்சாயத்தாரால் கண்டு பிடிக்கப்பட்டவைகள். 1920ம் வருஷத்து சென்னை மாகாணப் பஞ்சாயத்துக்களின் ஆக்டு ரத்து செய்யப்பட்டிருக்கிறது. 1920-ம் வருஷத்து சென்னை லோகல் போர்ட் ஆக்டின் நிபந்தனைகள். 1930-ம் வருஷத்து 9-வது ஆக்டினால் சீர்திருத்தம் செய்யப்பட்டபடி இப்பொழுது பஞ்சாயத்துக்களை ஆண்டு வருகிறது. இப்பொழுது ரத்தான ஆக்டு அனுமதித்தபடியும் முன் நடந்தது போலவும் குறிப்பிட்ட வகையில் வெவ்வேறு தொழில் வியாபார வரிகள், இப்புதிய ஆக்டின்படி விதிக்கமுடியாது: ஆனால் வில்லேஜ் பஞ்சாயத்து எரியாக்களில் உள்பட்ட இடங்களில் பொதுவான வகையிலேயே தொழில் அல்லது வியாபார வரிகள் விதிக்க உரிமையுண்டு. வரி விதிக்குந்தகுந்த குறைவான அரை வருஷ வருமானம் 150 ரூபாயாகும். பஞ்சாயத்துகள். லோக்கல் போர்டு ஆக்டில் அமெண்டு செய்யப்பட்டபடி 4-வது ஷெடியூலில் 9-வது ரூல் 1-வது பாராவில் வகுத்திருக்கிற அரை வருஷத்துக் கூடுதலான ரேட்டுகளுக்கு அதிகமாகாமல் வருமானத்தின்பேரில் ஜனங்களுக்கு உத்தியோக வரிவிதித்து, தங்களுடைய ஜில்லா போர்டாருக்கு அபிப்பிராயப் பத்திரங்களை அனுப்பி ஷாங்ஷன் பெற்றுக்கொள்ள வேண்டும். ஜில்லா போர்டார் மேற்படி ஆக்டின் III-வது ஸெக்ஷன்படி, விவசாயிகள்போன்ற குறிப்பிட்ட வகுப்பினரை வரிசெலுத்துவதிலிருந்து விலக்கலாம். அப்படியே பஞ்சாயத்துகளும் இந்த வகுப்பினரை வரியிலிருந்து விலக்க வேண்டுமென்று குறிப்பிடலாம்.

(3) வீட்டுவரியும் சில்லறை வரிகளும்:—முன்னமே யூனியன்போர்டுகளாயிராத பஞ்சாயத்தாரிடமிருந்து வீட்டுவரி வசூல் விஷயமாகவும் இதர சில்லறை வரிகளின் வசூல் விஷயமாகவும் உள்ள அபிப்பிராயப் பத்திரங்களை அமெண்டு செய்யப்பட்டபடி லோக்கல் போர்டு ஆக்ட் 75-ம் ஸெக்ஷன் 2-ம் பாரா (ஏ) பிரிவின் கீழ் ஷாங்ஷன் பெறும்பொருட்டு லோக்கல் போர்டு இன்ஸ்பெக்டருக்கு அனுப்பவேண்டும் பஞ்சாயத்துகள் வீடுகளின் கைமுதல்விலை மதிப்பின் பேரிலோ. அல்லது அவற்றின் வருஷாந்தர விலை மதிப்பின் பேரிலோ தீர்வை விதிக்கவேண்டுமே தவிர வேறெந்த முறையிலும் தீர்வை விதிக்கக் கூடாது. கிராமாந்தரங்களில் பஞ்சாயத்தார் வீடுகளுக்கு அவற்றின் கைமுதல் விலைமதிப்பின்பேரில் தீர்வை விதிப்பதே எப்பொழுதும் சௌகரியமாயிருக்கும். அப்படி வரி விதிப்பதில், கீழ்க்கண்டபடி

## கிராம பஞ்சாயத்து

கிராமவிகிதமான வரியைக் குறிப்பிட்டு வீடுகளைக் குறைந்த பக்ஷம் ஆறு இரகங்களாகப் வகுக்கவேண்டும்.

| | வீடுகளின் கைமுதல் விலைமதிப்பு. | | | அரை வருஷ விகிதம். |
|---|---|---|---|---|
| மதிப்பு | 100 ரூபாயிலிருந்து | 200 ரூபாய் மட்டும் | | X |
| ,, | 201 ,, | 300 | ,, | Y |
| ,, | 301 ,, | 400 | ,, | Z என்றிப்படியே வகுக்கவும். |

ஏற்கெனவே யூனியன் போர்டுகளாயிருந்த பஞ்சாயத்துக்கள், வீட்டுவரி வசூல் செய்ய விரும்புவதாயின், 1931-ம் வருஷம் ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து ஜில்லா போர்டாராலே வீடுகளுக்குத் திரும்பவும் விலைமதிப்பிடச்செய்த பின் வீட்டுவரி வாங்கவேண்டும். இந்த வரியாக்களில் வீட்டுவரி வசூலிப்பின் கட்டாயத்தைத் தீர்மானிக்க ஜில்லா போர்டுக்கே அதிகாரமுண்டு என்பதைக் கவனிக்கவும். இதர காணுவித வரிகளை வசூலிப்பதற்கான அபிப்பிராயப்பத்திரங்களை இனி ஏதாவது புதிய ரூல்கள் விதிக்குமளவும் கிராமப் பஞ்சாயத்து ஆக்டின் கீழ்க்கண்டுள்ள புறவொழுக்க முறைகளின்படி முன்போலவே அனுப்பலாம். தற்கால நிலைமைக்காக சீர்திருத்தும் சட்டத்தில் செய்த ரூலுகளை அனுசரித்தும் அதில் பத்தாவது ரூல்படி சர்க்காரால் வெளியிட்ட உத்தரவுகளை அனுசரித்தும் கிராம பஞ்சாயத்து ஆக்டின் கீழ் ஏற்கெனவே ஸாங்க்ஷன் செய்துள்ள வரிகள் கீழ்க்கண்டவாறு நடபடியில் இருந்து வருகின்றன.

(a) வீட்டுவரி 31—3—31 மட்டும்.

(b) தொழில் வியாபார உத்தியோக வரிகள் 31—3—31-மட்டும்.

(c) காணுவித வரிகள் 26-8-30 மட்டுமேயாம். அந்தத் தேதியிலேதான் புதிய ஆக்ட் நடபடியில் வந்தது. அந்த ஆக்டில் 75-வது ஸெக்ஷன் 2-வது பாராவின்கீழ் புதிதாக ஸாங்க்ஷன் பெற்றுக்கொண்டாலன்றி இந்த வரிகளை வசூலிக்க இடந்தரு மேற்பாடுகள் எதுவுமில்லை.

ஆகையால், இந்த வரிகளை யெல்லாம் உறுதிப்படுத்திக்கொள்ள விரும்புகிற பஞ்சாயத்துகள் உடனே லோகல் போர்டு இன்ஸ்பெக்டருக்கு மனுச்செய்துகொள்ள வேண்டும். 26-8-30 க்கு முன் எந்த எந்த வரிகளுக்குப் பாக்கிப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறதோ அந்தப் பாக்கிகளை மட்டும் ஜெனரல் கிலாஸஸ் ஆக்டின் 8-வது ஸெக்ஷன் டி வகுப்பின் அதிகாரத்தின்படி பஞ்சாயத்தார் பாக்கி வரிகளை வசூலித்துக்கொள்ளலாம். பாக்கிப் பொறுப்பு என்றால், வரிவிதிப்பு ஜாபிதாவில் எழுதப்பெற்றதோ அல்லது, தீர்மானமான ஒரு தொகைக்கான டிமாண்டுகளைப் பெற்றுக்கொண்டதோவாகும். உதாரணமாக, 26-8.30-க்கு முன் குறிக்கப்பட்டு வரி செலுத்தவேண்டியவர்கள் ஒவ்வொருவராலும் செலுத்தப்படவேண்டிய பாக்கிகளான, ஸ்தாவர ஜங்கமப் பொருள்களின்மேல் விதிக்கப்பெற்ற தீர்வையாவது அல்லது, குடி மராமத்துக் கட்டணங்களாவது என்று பொருள்படும். இதற்கு மாறாக வார்வாசல் வரிகளோ, ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலின்பேரில் அன்றாடம் வசூலிக்கவேண்டிய ஸ்தாவரமகிமைகளோ 26-8.30-க்குப் பின்பு திரும்பவும் மதிப்பிடப்படாமல் வற்புறுத்தி வசூலிக்க முடியாது.

ஸாங்க்ஷன் பெற்ற வரிகளின் அறிவிப்பு முறைகள் பின்னால் தெரிவிக்கப்படும்; ஆனால், அது கிராமங்களில் தமுக்கடிப்பித்தும், பஞ்சாயத்துக்குக் கச்சேரிகள், தாலூக்கா போர்டு, ஜில்லா போர்டுகளின் விளம்பரப் பலகையில் விளம்பர மொட்டியும் தெரிவிக்கப்படலாம் என்று தோன்றுகிறது.

---





1930-வருஷம் நவம்பர் மாதம் 3வ் தேதி நாமக்கல் போர்டு பெண் பாடசாலை கட்டடத்தில் நடந்த நாமக்கல் உபஜில்லா பஞ்சாயத்து கமிட்டியின் ஜெனரல்பாடி மீட்டிங்கில் (பொதுக் கூட்டத்தில்) நடந்த நடவடிக்கைகளின் சுருக்கம்.

ஆஜர் ஆனவர்கள் ; 31 பஞ்சாயத்துக்களும், 67 மெம்பர்களும்.

தீர்மானங்கள் (1) ம-ா-ா-ஸ்ரீ சிவசாம்ப ஐயர் தலைமை வகிக்க வேண்டுமென்று ம-ா-ா-ஸ்ரீ செல்லப்ப கௌண்டர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு நந்த சாமி கௌண்டர் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது. தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது.

தீர்மானம் (2) லோக்கல்போர்டு ஆக்ட் 30-வது செக்ஷனுடு இந்தக் கமிட்டியின் பழைய ரூல்களை இசைத்த பிறகு கீழ்கண்ட புதிய ரூல்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டன.

ரூல்கள் :—1. பெயர்.—நாமக்கல் உபஜில்லாப் பஞ்சாயத்துக் கமிட்டி.

2. அதிகார எல்லை.—ராசிபுரம், நாமக்கல் தாலூக்காக்கள். (அதாவது நாமக்கல் தாலூக்கா போர்டின் விஸ்தீரணம் அல்லது நாமக்கல் ரெவினியூ டிவிஷன்)

3. நோக்கங்கள்.—

(1) பிரசார வேலை செய்யவும் 1930 வருஷத்தின் மதராஸ் லோக்கல் போர்டுகளின் 11-வது ஆக்டின்படி பஞ்சாயத்து இயக்கத்தை பரப்பவும் புதிய பஞ்சாயத்துக்களை ஸ்தாபிக்கவும்.

(2) பஞ்சாயத்துக்களை விருத்திசெய்யவும் அவைகளின் வேலையை மேற்பார்க்கவும். அவைகளைச் சரியான முறையில் நடத்தவும்.

(3) பஞ்சாயத்துக்களுக்கு யோசனைச் சொல்லவும். அவைகளைப் பரிசோதிக்கவும்.

(4) அந்தப் பஞ்சாயத்துக்கள் செய்ய ஒத்துக்கொண்ட வேலைகளை அனுமதி வாங்கவும், அந்த வேலைகள் செய்வதை மேற்பார்வைகளைக் கவனிக்கவும்.

(5) ஒன்றுக்கு மேற்பட்ட பஞ்சாயத்துக்கள், அக்கறை யெடுத்துக் கொள்ளுகிற விஷயங்களில் ஜாயண்டு கமிட்டிகளின் மூலமாக அவ்வேலைகளை நிறைவேற்றவும்.

(6) பஞ்சாயத்தின் உரிமைகளையும் அவற்றின் உயரிய நோக்கங்களையும் பாதுகாக்கவும்.

(7) பஞ்சாயத்துக்கள் விருத்தியடைவதற்காக கான்பிரன்ஸ்கள் கூட்டவும், படகாட்சிகளோடு கூடிய பொதுக் கூட்டங்கள் கூடவும் பஞ்சாயத்துக்களின் அபிவிருத்திக்காக புத்தகங்கள் பிரசுரிக்கவும்.

(8) பஞ்சாயத்துக்கள் மேன்மை யடைவதற்கும். அவற்றின் வேலைகளைச் சரிவர செய்வதற்குமான எல்லா வகை அனுகூலங்களைச் செய்வதற்கும்.

(9) 1930-ம் வருஷத்து லோக்கல் போர்டுகளின் 11-வது ஆக்டு ஷெட்யூல் v, I.A. 1, 2 கிளாஸ்களில் கூறியபடி கிராம புநருத்தாரணத்துக்கும் அபிவிருத்திக்கும் ஏற்ற எல்லா வழிகளையும் அமைக்கவும்.

4. பொதுக்கூட்டம், (ஜெனரல் பாடி).—

(a) கீழ் கண்டவர்கள் இந்தக்கமிட்டியின் பொதுக் கூட்டங்களில் மெம்பர்களாக அருகதையுள்ளவர்கள்.

(1) ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பரும், 1930-ம் வருஷத்து மதராஸ் லோக்கல் போர்டுகளின் ஆக்ட் XI-ன் படி இந்த ஏரியாவில் அதிகாரம் வாய்ந்த லோக்கல் போர்டுகளின் பிரதிநிதிகளும்.

(2) மேற்கூறிய ஆக்ட் 30 (2) ஸெக்ஷனில் கூறிய மற்றப் பெரிய மனிதர்களும்.

(b) அவர்கள், அவர்கள் தெரிந்தெடுக்கப்பட்ட தேதி முதல் மூன்று வருஷங்களுக்கு அதிகாரஞ் செலுத்துவார்கள். மறு எலெக்ஷன் வரை அவர்கள் ஆபீஸில் இருப்பார்கள்.

5. எக்ஸிக்யூடிவ்.—மேற்கூறிய மஹாசபை, அதன் மெம்பர்களிலிருந்து 9 மெம்பர்களையும் ஒரு காரியதரிசியையும் தேர்ந்தெடுக்கும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்ட கமிட்டி, கல்வி, சுகாதாரம், விவசாயம், கைத்தொழில் கூட்டுறவு, வரி வசூல் முதலிய பஞ்சாயத்துக்களின் அபிவிருத்திக்கு ஆன வழிகளில் அனுபவம் வாய்ந்த வேறு ஐந்து பேர்களையும் வேண்டுமானால் தங்களோடு ஒத்துழைக்கச் சேர்த்துக்கொள்வார்கள். மேலும் அவர்கள் கமிட்டியில் தற்காலம் ஏற்படும் காலிஸ்தானங்களை நிரப்பவும் உபயோகப்படலாம். மேற்கூறிய பதினைந்து கமிட்டி மெம்பர்களும் இந்த உபஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டியின் காரியாதிகளைக் கவனித்து நடத்திவருவார்கள்.

6. பண்டு—நிதி.—(1) இந்தக் கமிட்டியில் சேரும் ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பரும், ஒவ்வொரு லோகல் போர்டு பிரதிநிதியும், இந்தக் கமிட்டியில் சேருங் காலத்தில் கூட்டுறவுக் கட்டணமாக ரூ 10 செலுத்தவேண்டும். (2) மஹா சபை விதிக்கும் எல்லா கட்டணங்களையும் ஒவ்வொரு பஞ்சாயத்து மெம்பரும் செலுத்த ஒப்புவாரென்று கொள்ளப்படுகிறது. (3) மேற்கூறிய வரிகளுக்கும் புறமே இந்தக் கமிட்டியின் நோக்கங்களை மேற்கொண்டு நடத்துவதற்காக கீழ்க் கண்ட வருமான வகைகளை இந்தக் கமிட்டி விதித்து வாங்க அதிகாரமுள்ளது.

(a) வருஷச் சந்தா :—ஒவ்வொரு சேர்க்கப்பட்ட பஞ்சாயத்தும் லோக்கல் போர்டுகளும் வருஷச் சந்தாவாக ரூ. (5) செலுத்தவேண்டும். தவறினால் அவைகளுக்கு மஹா சபையில் வோட்டுரிமை கிடையாது.

(b) மேல்பார்க்கும் நிதி :—(1) பஞ்சாயத்துக்களின் வருஷவாரி சாதாரண வருமானத்தில் 2½%.

(2) உபாத்தியாயர் தன்மைக்காக அல்லாமல் மற்ற விஷயங்களுக்காக கவர்ன்மெண்டார் ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் கொடுக்கிற கிராண்டுகளில் 2½%.

(c) கவர்ன்மெண்டாரும், லோக்கல் போர்டுகளும் மற்றவர்களும் கொடுக்கிற உதவிப்பணம்.



குறிப்பு. ஒரு வருடம் மார்ச்சுமாதம் 31உயோடு முடிகிற வருடமென்று கொள்க.

7. வரவு செலவு முதலியன.—மஹா சபையின் ஆமோதிப்பிற்கு உட்பட்ட வரவு செலவு திட்டத்தில், வரவுக்கு மேற்போகாதபடி கீழ்க்கண்ட வகைகளில் இந்தக் கமிட்டி செலவு செய்யலாம் ;—

ஆபீஸ், சிப்பந்தி, பிரசார வேலை, பஞ்சாயத்துக்கள் அமைத்தல், பஞ்சாயத்துக்களை மேல்பார்வையிடுதல், என்ஜினீரிங் வேலைகள், பஞ்சாயத்துப் பள்ளிக்கூடங்கள், கிராம பஞ்சாயத்து பள்ளிக்கூடங்களில் உள்ள உபாத்தியாயர்களுக்குத் தனித்த பயிற்சி, கிராமப்புநருத்தாரணமும், அதற்கான வேலைகளைச் செய்வதற்கு சூபர்வைஸர்களை நியமிக்கவும், ஓவர்ஸியர்கள், மேஸ்திரிகள், லஸ்கர்கள், பியூன்கள் முதலியவர்களை நியமிக்கவும் அவர்களுக்குச் சம்பளங்கள் கொடுக்கவும், பிரயாணச் செலவுகள் அனுமதிக்கவும் ;—

8. எஸ்டாபிளிஷ்மெண்ட்.— சிப்பந்திகள் நியமிப்பது :—எக்ஸிகியூடிவ் கமிட்டி வேண்டி வந்தால் தங்கள் வேண்டியபடி, கமிட்டியின் ரூல்களுக்கு விரோதப்படாமல், கீழ்த்தர ரூல்களைப் பிறப்பித்துக்கொள்ளவும், அதன் வேலைகளைச் செய்யவேண்டிய சிப்பந்திகளை நியமித்துக்கொள்ளவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. இவ்விதம் இக்கமிட்டி செய்யும் வேலைகளும் ரூல்களும் அந்தக் கமிட்டியையும் மஹா சபையின் எல்லா மெம்பர்களையும் கட்டுப்படுத்தும்.

9. இந்தக்கமிட்டி, சேர்க்கப்பட்ட பஞ்சாயத்துக்களுக்கு வரவேண்டிய பாக்கிகளை வசூலிக்கவும், வேண்டிவந்தால் அதற்குச் சட்டப்படி செய்யவேண்டிய எல்லாக் காரியங்களை செய்யவும் அதிகாரம் வாய்ந்ததாயிருக்கும்.

10 மஹா சபைக் கூட்டங்கள்.—பஞ்சாயத்துக் கமிட்டியின் மஹா சபை பொதுக்கூட்டங்கள் குறைந்தபக்ஷம் வருஷத்துக்கு ஒரு முறையாவது கூடும். அப்படிக் கூடவேண்டியதற்குள்ள கோரம், 30 மெம்பர்கள் அல்லது சேர்க்கப்பட்ட 15 பஞ்சாயத்துக்களின் பிரதிநிதிகள் ஆகிய இவைகளில் எது குறைவாயிருக்கிறதோ அது.

11. எக்ஸிக்யூடிவ் கமிட்டியின் மீட்டிங்குகள் :—

(a) எக்ஸிக்யூடிவ் கமிட்டியின் கூட்டங்களுக்குக் கோரம் 5 மெம்பர்கள், கமிட்டி மெம்பர்கள் தங்களுக்குள்ளேயே ஒரு சேர்மனையும் உப சேர்மனையும் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும். வைஸ் சேர்மன் (அல்லது உபசேர்மன்) பொக்கிஷதாரராகவும் இருப்பார், காரியதரிசி, பொக்கிஷதாரரோடு ஒத்துப்பேசி கமிட்டியின் காரியாதிகளை நடத்துவார். இவ்விருவர்களுக்குள்ளும் ஏதாவது அபிப்பிராயபேதம் ஏற்பட்டால், காரியதரிசியின் தீர்மானமே முடிவானதாயிருக்கும், ஆனால் பொக்கிஷதாரர் வேண்டுமானால் காரியதரிசிக்கு எதிராக எக்ஸிக்யூடிவ் கமிட்டியின் முன் அப்பீல் செய்து கொள்ளலாம்,

(b) எக்ஸிக்யூடிவ் கமிட்டியின் காரியதரிசி கமிட்டியின் கூட்டங்களை குறைந்த பக்ஷம் இரண்டு மாதங்களுக்கு ஒருமுறையாவது கூட்ட வேண்டும். வேண்டுமானால் அவருடைய இஷ்டப்படி சிறு கூட்டங்கள் இடைக்காலங்களிலும் கூட்டலாம். எக்ஸிக்யூடிவ் கமிட்டி மெம்பர்களின் மெஜாரிட்டியார் எழுத்து மூலமாகக் கேட்டுக்

கொண்டால் காரியதரிசி எக்ஸிகியூடிவ் கமிட்டி கூட்டங்கள் கூட்டவேண்டும்.

(c) கமிட்டியின் ரிக்கார்டுகளைப் பாதுகாப்பதற்கும் கணக்குகளைச் சரிவர வைத்துக் கொள்வதற்கும் சிப்பந்திகளின் வேலையைச் சரிபார்ப்பதற்கும் காரியதரிசி ஜவாப்தாரியாயிருப்பார். இந்த உபஜில்லா பஞ்சாயத்துக் கமிட்டியின் எல்லாச் சட்ட சம்பந்தமான வியவஹாரங்களுக்கும் அவரே எஜெண்டாக விருப்பார். எக்ஸிக்யூடிவ் கமிட்டியார் ஏற்பாடு செய்யும் வேறு உபகமிட்டிகள் எல்லாவற்றிற்கும் அவரே காரியதரிசியாகவிருப்பார். ஆனால் அவர் வேண்டுமானால், அந்த உபக்கமிட்டிகளில் இருந்து வேலைசெய்வதற்குத் தனக்குள்ள அதிகாரத்தை இன்னொருவருக்கும் கொடுத்து, அவரைத் தனக்குப்பதிலாக இருக்கச் சொல்லலாம். மேலும், காரியதரிசியே ஜனரல் பாடி மீட்டிங் (மஹா சபை கூட்டம்) எக்ஸிக்யூடிவ் கமிட்டிக் கூட்டங்கள், உபகமிட்டிகள் ஏதாவது இருந்தால் அவற்றின் கூட்டங்களிலும் நடந்த நடவடிக்கைகளைக் குறித்துவைத்துக் தெரியப்படுத்த வேண்டியவர்களுக்கு தெரியப் படுத்த வேண்டும்.

(d) சாதாரணமாக சேர்மனே, எக்ஸிக்யூடிவ் கமிட்டிகளின் எல்லா மீட்டிங்களுக்கும் தலைமை வகிப்பார்: அவர் ஆஜராகாதிருந்தால் உபசேர்மன் தலைமை வகிப்பார். இருவரும் ஆஜராகாதிருந்தால், அங்கு ஆஜராகி இருக்கும் மெம்பர்களில் ஒருவரைத் தலைமை வகிக்கும்படி காரியதரிசி பிரேரேபிக்கலாம்: அந்தப் பிரேரேபனை அனுமதிக்கப் பட்டால் நடவடிக்கைகள் நடக்கலாம்.

(e) எவரேனும், மீட்டிங் கூடுவதற்குள்ள அறிக்கைகளைப் பெற்றுக்கொண்டும், சேர்ந்தாப்போல் 3 மீட்டிங்குகளுக்கு ஆஜராகதிருப்பாரானால், அந்தக்காரணத்தாலேயே அவர் அந்தக் கமிட்டியின் பிரதிநிதி என்னும் ஸ்தானத்தினின்றும் நீக்கப்படுவார். ஆனால் காரியதரிசி சரியான காரணங்களோடு அவரை மறுபடியும் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்று சிபாரிசு செய்தால், அவரை மறுபடியும் அந்தக்கமிட்டியில் சேர்த்துக்கொள்ளலாம்.

12, எக்ஸிக்யூடிவ் கமிட்டியின் வேலைகள் :—

(a) காரியதரிசியைத் தவிர எக்ஸிக்யூடிவ் கமிட்டியில் உள்ள ஒவ்வொரு மெம்பரும், ஒவ்வொரு பிர்காவில் உள்ள பஞ்சாயத்துக்களை மேற்பார்க்கும் வேலையை ஒப்படைக்கப்படுவார். அவர் தனித்தாவது மற்ற மெம்பர்களின் உதவியோடாவது, தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பஞ்சாயத்துக்களை மேற்பார்த்து வருவதோடு காலாகாலங்களில் அவ்விஷயமாய் ரிப்போர்டுகளும் அனுப்ப வேண்டும்.

(b) காரியதரிசியும், எக்ஸிக்யூடிவ் கமிட்டியால் பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட சிப்பந்திகளும், கமிட்டியின் சார்பாக, பஞ்சாயத்துக்கள் சரியான முறையில் நடந்து வருகின்றனவா என்று பரிசோதிக்க அதிகாரமுடையவர்களாயிருப்பார்கள்: அதோடு பஞ்சாயத்துக்களின் விசேஷித்த கூட்டங்கள் கூடி அவற்றில் பஞ்சாயத்துக்



களின் தேவைகளைப்பற்றி அறிவிக்க எல்லா முயற்சியும் எடுத்துக் கொள்ளவும் அதிகாரம் வாய்ந்தவராயிருப்பார்கள். அவர்கள் குறித்த விதமான முன் அறிக்கைகள் வெளியிடாமலே, விசேஷக் கூட்டங்கள் கூட்டவும் அதிகாரம் வாய்ந்தவர்கள். ஆனால் அக் கூட்டங்கள் எதற்காகக் கூட்டப்பட்டிருக்கின்றனவோ அவ் விஷயங்களைத் தவிர வேறு விஷயங்கள் அக்கூட்டங்களில் பேசப் படாதபடி, அவர்கள் விசேஷித்த கவலை எடுத்துக்கொள்ள வேண்டும்.

13. வேலைகள் முதலானவைப்பற்றிய தீர்மானங்கள். எக்ஸிக்யூடிவ் கமிட்டியே அசலுடைய மீட்டிங்கில் எல்லா வேலைகளையும் தீர்மானம் செய்ய வேண்டும். மிகவும் விசேஷித்த சந்தர்ப்பங்களில் மட்டும் அவர்கள் தங்கள் அதிகாரங்களை 3 மெம்பர்களுக்கு அதிகப்படாத ஒரு கமிட்டியின் இடத்தில் ஒப்படைத்து விடலாம்.

14. ஆபீஸ் ஸ்தாபன செலவுகள் :—

(a) 10 ரூபாயிக்கு அதிகப்பட்டதும் ஒரு மாதத்திற்கு மேற்படாததுமான என்னேமகரும் நிர்வாக சபையால் அங்கீகரிக்கப்படவேண்டும்.

(b) ஆபீஸில் உள்ள சிப்பந்திகள் எல்லோரும் காரியதரிசியின் மேற்பார்வையில் வேலை செய்யவேண்டும். காரியதரிசிக்கு கீழே வேலை செய்கிற எந்த வேலைக்காரர்களுக்கும் 2 ரூபாய் மட்டும் அபராதம் விதிக்கவும், அடுத்த எக்ஸிக்யூடிவ் கமிட்டி கூட்டம் வருகிற வரைக்கும் ஒரு வேலைக்காரரை வேலையிலிருந்து நிறுத்திவிடவும் அதிகாரம் உண்டு.

எந்தக்கீழ் உத்யோகஸ்தரையும் முன் அறிக்கையில்லாமல் எடுத்துவிடவும் வேலையில் க்ராகரித்துவிடவும் எக்ஸிக்யூடிவ் கமிட்டிக்கு அதிகாரம் உண்டு. இப்படி நிராகரித்துத் தள்ளப்பட்ட ஆள் ஜெனரல் பாடியினிடத்தில் அப்பீல்செய்துகொள்ளலாம்.

15. எக்ஸிக்யூடிவ் கமிட்டியிலுள்ள மெம்பர்கள் எல்லோரும் எவ்விதமான ஊதியமும் பெறாமல் கௌரவமாக வேலைசெய்யவேண்டும். கமிட்டி காரியார்த்தமாக அவர்கள் வெகுதூரம் பிரயாணம் பண்ணும்படி ஏற்பட்டால் காரியதரிசி தம் சுயதீர்மானத்தின்பேரில் அவர்களுக்கு பிரயாணச் செலவு கொடுக்கலாம். அப்படியே காரியதரிசி அவர்கள் இதர செலவுகளுக்கும் தம்முடைய சொந்த நிதானத்தில் 5 ரூபாய் வரைக்கும் செலவு செய்யலாம்.

16. வழக்குகள்.—எக்ஸிக்யூடிவ் கமிட்டியும் வில்லேஜ் பஞ்சாயத்துகள் சம்பந்தப்பட்ட விதிகளில் ஏதாவது அபிப்பிராயபேதங்களோ, சந்தேகங்களோ ஏற்பட்டால் எக்ஸிக்யூடிவ் கமிட்டியின் ரூல்களையே அனுசரிக்கப்படும்.

17. ரூல்களின் சீர்திருத்தங்கள்.—ஜெனரல் பாடி மீட்டிங்கில் கூடுகிற மெம்பர்களில் மூன்றில் இரண்டு பங்கு மெம்பர்களுடைய ஓட்டுகளைப் பெற்றால் மாத்திரமே கமிட்டியின் ரூல்களை சீர்திருத்தமுடியும்.

18. கூட்டங்களின் அறிக்கைகள்.—மிகவும் அவசரமான சந்தர்ப்பங்களில் தவிர இதர சமயங்களில் மீட்டிங்குகள் இன்ன காரியத்தை நிதானிப்பதற்காக இன்ன இடத்திலே இன்ன தேதியில் இன்ன மணி நேரத்தில் கூட்டம் கூடப்போகிறது என்று பத்திரம் மூலமாக பூர்ணமாக மூன்று நாட்களுக்கு முன்னமேயே அறிவிக்க வேண்டும். இந்த விதியானது எல்லா ஜெனரல் பாடி கூட்டங்களுக்கும் எக்ஸிக்யூடிவ் கமிட்டிகூட்டங்களுக்கும் சப் கமிட்டி கூட்டங்களுக்கும் பொருந்தும். இப்பொழுது சொன்ன கூட்டங்களில் நடைபெறும் நடவடிக்கைகளையும் காரியதரிசியானவர் தம்முடைய சொந்த நிதானத்தின்பேரில் எந்த விதமாவும் பிரசுரப்படுத்தலாம்.

19. கணக்குப் பரிசோதனை.—ஒவ்வொரு வருஷத்தின் ஆரம்பத்திலும் ஜெனரல் பாடியைச் சேர்ந்த அங்கத்தினர்கள் தங்களிலேயே மூன்று பேரை கணக்குப் பரிசோதனை கமிட்டியார்களாக தெரிந்து எடுக்கவேண்டும். அவர்கள் கணக்குகளை அடிக்கடி பரிசோதனை செய்து வருஷத்திற்கொருமுறை ரிப்போர்ட் அனுப்பவேண்டும்.

20. இந்தக் கமிட்டி சம்பந்தப்பட்டதாகிய எந்த விஷயங்களைப்பற்றிய எத்தகைய நடவடிக்கைகளும், அந்த நடவடிக்கைகள் நடந்த தேதிக்கு மூன்று வருஷத்திற்குப்பின் எந்தக் கோர்ட்டிலும் செல்லாகா.

## மற்ற தீர்மானங்கள்.

*III.*—1930 வருஷத்து மதருஸ் ஆக்டு XI, 30 செக்ஷன் 2-வது பிரிவின்கீழ் பின்வருகின்ற கனவான்கள் ஜெனரல் பாடியின் அங்கத்தினராக சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். புதிய ஆக்டின்படிக்கு :—

(1) ம-ா-ா-ஸ்ரீ T. P. சுப்பரமணிய கந்தர் அவர்கள்
(2) ,, T. ராமராவ் அவர்கள்.
(3) ,, ராவ்சாஹீப் N. R. வெங்கடராம ஐயர் அவர்கள்.
(4) ,, திவான்பகதூர் R. ராமச்சந்திர ராவ், C.S.I.

*IV.*—புதிய ரூல்களின்படிக்கு ம-ா-ா ஸ்ரீ ராவ்சாஹீப் N. R. வெங்கடராம ஐய்யர் அவர்கள் காரியதரிசியாக தெரிந்து எடுக்கப்பட்டிருக்கிறார்.

எக்ஸிக்யூடிவ் கமிட்டி மெம்பர்கள் சேர்மனையும், உபசேர்மனையும் தேர்ந்து எடுப்பார்கள்.

*V.*—கணக்குப் பரிசோதனைக் கமிட்டியார்கள் சீக்கிரம் கணக்குகளையெல்லாம் பரிசோதித்து தங்கள் ரிப்போர்டை அனுப்பிவைக்கும்படிக் கூறப்படுகிறார்கள்.

*VI.*—20—4—1930 லிருந்து 30—11—30 மட்டும் உள்ள வரவு செலவு கணக்கு எல்லாம் வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. இந்தத்தேதி கையிருப்பு ரூபாய் 306—அணா 2 பை 10.

*VII.*—27—11—30-ல் பிரசிடெண்ட் அனுப்பிய இராஜினாமாக் கடிதம் வாசித்து அங்கீகரிக்கப்பட்டது. அவர் பிரசிடெண்டாயிருந்த காலத்தில் செய்த உதவியைக் குறித்து இந்த கமிட்டியார் மனப்பூர்வமான நன்றி செலுத்துகிறார்கள்.

*VIII.*—பம்பாய் கவன்மெண்டார் தங்களுடைய மாகாணத்திலுள்ள சனல்பயிர் செய்கிறவர்களுக்கு உதவி செய்வது போலவே இந்த மாகாணங்களில் நிலக்கடலைப் பயிர் செய்கிறவர்களுக்கு உதவி செய்வதற்கு இந்த மதருஸ் கவர்ன்மெண்டை கேட்டுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது.

*IX.*—இரண்டு ரூபாய் வருஷ சந்தா கட்டி வில்லேஜ் பஞ்சாயத் என்ற மாதாந்தர பத்திரிகையை வாங்க வேண்டுமெனத் தீர்மானித்திருக்கிறது.

*X,*—1930 வருஷத்து XI-வது மெட்ருஸ் ஆக்டின் பிரிவின்படி பஞ்சாயத்தார்க்குப்போய்ச் சேரவேண்டிய நிலத்தீர்வையானது இந்தப் பசலையில் ஜில்லாப் போர்டுக்கும் தாலூக்கா போர்டுக்கும் சேரவேண்டுமென்று 11-11-30 தேதியில் வெளிவந்த எல். & எம் ஜீ. ஒ நம்பர் 4339 ல் கண்டிருந்த செய்தியைப் படித்து இந்தக் கமிட்டியரார் மிகவும் துக்கப்படுகிறார்கள்.

கவர்ன்மெண்டார் இந்த ஜி. ஒ. ஆடரை வெகு சீக்கிரம் மாற்றி பஞ்சாயத்துக்குச் சேரவேண்டிய நிலத்தீர்வையின் பாகத்தை இந்த 1340-வது பசலையில் அந்தந்த பஞ்சாயத்தார்களுக்கு கொடுத்துவிடவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறது இந்த விஷயமாக காரியதரிசியார் போதுமான ஊக்கத்தோடு நடவடிக்கைகள் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கையொப்பம்) P. சிவசாம்ப ஐய்யர்,
சேர்மன், 31—11—1930.

லோக்கல் [illegible] க்ட்டர்க்கு தெரிவிக்கப்பட்டது.

N. R. வெங்கடாமன், காரியதரிசி.

160209

## பொது விளம்பரம்.

தாலூகா போர்டுத்தலைவர்களுக்கும், பஞ்சாயத்தார்களுக்கும் ஓர் வேண்டுகோள் பஞ்சாயத்து சம்மந்தமாயுள்ள பிரசுரஞ் செய்யக்கூடிய முக்கியமாயுள்ள விஷயங்களைப் பஞ்சாயத்துச் சஞ்சிகைக்கு நீங்கள் அனுப்பும்பக்ஷத்தில் அவைகள் சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யப்படும். காட்டு இலாகா பஞ்சாயத்து, நீர்ப்பாய்ச்சல் பஞ்சாயத்து கூட்டுறவுப் பஞ்சாயத்து, பஞ்சாயத்துக் கோர்ட்டுகள், மற்றுமுள்ள சங்கங்கள் தங்கள் நடவடிக்கையில் விசேஷமாயுள்ளவைகளை இச்சஞ்சிகையில் பிரசுரஞ்செய்யுமாறு அனுப்பலாம். அவ்விதம் அனுப்பப்படும் நிரூபங்கள் சுருக்கமாகவும், தெளிவாகவுமிருத்தல்வேண்டும். கொஞ்சவிடத்தில் பல விஷயங்களை அப்போதுதான் வெளியிடமுடியும்.

நம் சஞ்சிகையை வாசிப்போருக்கு இச்சஞ்சிகையின் க்ஷேமத்தைக் குறித்து உங்களுக்குத் தோன்றும் அபிப்பிராயங்களை நமக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். பஞ்சாயத்து, அதன் முற்போக்கை நாடியுமுள்ள விஷயங்கள் கிராமச் செழிப்பிற்கு ஏதுவாயுள்ள விஷயங்கள் இவைபோன்றவை சம்மந்தப்பட்ட நிரூபங்களை நாம் பிரசுரிக்கத் தயாராயிருக்கிறோம். ஆனால் நிரூபங்கள் கடிதாசியின் ஒரு பக்கத்திலேயே எழுதியிருக்கவேண்டும்; சுருக்கமாயும் தெளிவாயுமிருக்கவேண்டும்.

விஷயதானம் செய்கிறவர்கள் தாம் எழுதும் விஷயங்கள் எந்தெந்த பாஷையில் வெளிவரவேண்டுமென்று விரும்புகின்றார்களோ அந்தந்த பாஷையிலேயே எழுதியனுப்புமாறு வேண்டிக்கொள்கிறோம்.

---

## பிரபல வேலைச்சுற்றுப் பிரயாண விளம்பரம்

சென்னை மாகாண கோவாபரேடிவ் யூனியன் பிரசிடெண்டாகிய ம-ா-ா-ஸ்ரீ, வி. ராமதாஸ் பந்துலுகாரு, பி. ஏ., பி. எல். 'கிராமப் பஞ்சாயத்து' பத்திராதிபராகிய ம-ா-ா-ஸ்ரீ, ஜி. ஹரிஸர்வோத்தமராவ் பந்துலு எம். ஏ. அவர்களுக்கும் கோவாபரேஷன் விஷயமாகவும் கிராமப் பஞ்சாயத்து விஷயமாகவும் பிரபல வேலை செய்வதற்காகச் சுற்றுப்பிரயாணம் செய்யப்போகிறார்கள். அவர்கள் 1930-௵ டிசம்பர் 20-ம் தேதியன்று அனந்தப்பூரில் வந்து சேருவார்கள். அவர்கள் 20.ம் தேதி ஜில்லா மத்திய கோவாபரேடிவ் பாங்கின் ஜனரல்பாடிக் கூட்டத்திலும் 21-ம்தேதி ராயலசீமா கோவாபரேடிவ் இன்ஸ்டிடூட்டின் கூட்டத்திலும் விஜயம் செய்தபிறகு ஜில்லாவின் உள்ளூர்களில் சுற்றுப்பிரயாணம் செய்வார்கள். அவர்கள் ஜில்லாவில் செய்யப்போகிற வேலையையும் பிரயாணங்களையும் பற்றிய விவரங்கள் அந்த ஜில்லாத்தலைவர்களோடு கலந்து கொண்ட பின்னரே தீர்மானமாகும். இந்தப் பிரயாணத்தில் அவர்கள் ஹாஸ்பெட்டிலும் பெல்லாரியிலும் விஜயம் செய்யக்கூடும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

பத்திராதிபர்.—கனம். ஜி. ஹரிஸர்வோத்தமராவ்-எம்.ஏ.

அச்சிடுவோர்.—மத்தியக் கூட்டுறவு அச்சு இயந்திரசாலை,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.